RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 31, 21 யூன் 2024 இதழ்:- 04

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham M.A.Sc. (Eng.) P.Eng
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
RBC Royal Bank Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## வடகிழக்கு தமிழ்த் தலைவர்களை ஒருமித்து சந்தித்த
## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்!
## திடீர் சுகயீனம் காரணமாக சம்பந்தர் பங்கேற்கவில்லை!



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 8 தமிழ் அரசியல் தலைவர்கள் ஒருமித்து சந்தித்து கலந்துரையாடினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர். இச் சந்திப்பில் சாணக்கியன், சுமந்திரன்சிறிதரன் செல்வம் அடைக்கலநாதன் சித்தார்த்தன் விக்கினேஸவரன்(3ம்பக்கம்)

## பிரிட்டன் தமிழர்களுக்கான கென்சவேர்ட்டிவ் கட்சியின் அர்ப்பணிப்பு மிகவும் உறுதியானது என்கிறார் டேவிட் கமரூன்



பிரித்தானிய தமிழர்களிற்கான கென்சவேர்ட்டிவ் கட்சியின் அர்ப்பணிப்பு மிகவும் உறுதி யானது தளர்ச்சியற்றது என பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட்கமரூன் தெரிவித்துள்ளார். பிரிட்டனிற்கு தமிழ் சமூகத்தின் விலைமதிப்பற்ற பங்களிப்பை பாராட்டியுள்ள அவர் அனைவருக்கும் உண்மை நீதி மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் பொது தேர்தலிற்கு முன்னதாக வெளியிட்டுள்ள வீடியோவில் (5ம் பக்கம் பார்க்க)

**ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca**

முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
தமிழும் இசையும்
இராப்போசன விருந்தும்
இன்பத் தமிழ்ப் பேச்சு
பர்வின் சுல்தானா
யூலை 28, 2024
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH (FINCH/ KENNEDY)
Zee தமிழ் சரிகமப புகழ்
கோபாலகிருஷ்ணன்
இன்னிசை மாலை
தொடர்புகளுக்கு- ஈழநாடு பரமேஸ்

## எண்பத்து மூன்றும் ஒன்றும்:- அவனின்றி ஓரணுவும் அசையாதா?



**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
Licence # 10530
1-877-366-3487

THINKING OF

## SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
Your neighborhood sales representatives



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

21 Years Real Estate Experience

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY





### Exceptional Opportunity to lease a prime stand-alone Building and nicely finished ground floor office space on Oshawa

- This property offers 19,500 Sq Ft of prime Industrial space
- Including 4,300 Sq Ft of Office space,
- 15,200 Sq Ft of Warehouse plus mezzanine space
- This building features 2 truck level doors within a heated dock area
- 2 Drive -in Doors with trailer parking on the side.


- Well-connected to highways (401,412 and 407)
- Easy access to public transit, providing great access to a strong labor pool
- Conveniently located near the GM plant


**Dundas / Henry**

Whitby $999,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Easy access to Whitby Go

**Midland Ave/ Eglinton Ave**

Scarborough $1,150,000
Bedrooms: 3 Washrooms: 2
Excellent Location, Min To Subway

**Taunton/Garden**

Whitby $969,000
Bedrooms: 3 Washrooms: 2
Professionally Renovated Home

**Lawrence /Morningside**

Scarborough $425,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony

**Tapscott Rd/Mclevin Ave**
FOR LEASE

Scarborough $2,200
Bedrooms: 2 Washrooms: 1
Clean and well kept Townhouse

**Major Mac./Markham Rd**
FOR LEASE

Markham $1,850
Bedrooms: 2 Washrooms: 1
Excellent Location, Sep. Entrance

Looking for more house?
www.AgentSiva.com
WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# வடகிழக்கு தமிழ்த் தலைவர்களை ஒருமித்து சந்தித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்! திடீர் சுகயீனம் காரணமாக சம்பந்தர் பங்கேற்கவில்லை!



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 8 தமிழ் அரசியல் தலைவர்கள் ஒருமித்து சந்தித்து கலந்துரையாடினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர்.

இச் சந்திப்பில் சாணக்கியன், எம்.ஏ. சுமந்திரன் சிறிதரன் செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்கினேஸ்வரன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பில் ஈடுபட்ட தலைவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணங்களின் அபிவிருத்தி மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் திடீர் சுகயீனம் காரணமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான சந்திப்பில் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்று 20 யூன் 2024 மாலை 5 மணியளவில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அக்கட்சிகளின் முக்கியஸ்தர்களைச் சந்திக்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க இலங்கையில் 13ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர், இதனை கூறியுள்ளார்.

இந்த நிலையில், 2009ஆம் ஆண்டிற்கு பின்னர் நாட்டை ஆட்சி செய்த 3 ஜனாதிபதிகளும், 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தமையை தமி்ழ் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் சுட்டிக்காட்டியதாக விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அதில் எவ்வித நன்மைகளும் தமிழ்மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை என்பதினை தாம் அந்த சந்தர்ப்பத்தில் எடுத்துரைத்தாக அவர் கூறியுள்ளார். 13 ஆம் திருத்தச்சட்டத்தில், உள்ள அதிகமான அதிகாரங்கள் பறிக்கப்பட்டு விட்டன. அதன் காரணமாக வெற்றுக் கடதாசி போலுள்ள ஒரு சட்டத்தை மக்களுக்கு வழங்குவதில் எவ்வித பயனும் இல்லை என்பதையும் தாம் சுட்டிக் காட்டியதாக விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விக்கினேஸ்வரன் வடக்கு முதலமைச்சராக இருந்த ஐந்து ஆண்டு காலப் பகுதியில் மாகாணசபைகளுக்கு இருக்கின்ற சிறிய அதிகாரங்களைக் கூடப் பயன்படுத்தி எந்தவொரு கருமத்தையும் ஆற்றாத ஒருவராகவே இருந்தார் என்பதும் இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது பாலியல் குற்றச்சாட்டில் இந்தியச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரேமானந்தாவை தனது குரு என்றும் அவரை விடுதலை செய்ய வேண்டுமென கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### மலையகத் தமிழர்களை ஒன்றாகச் சந்தித்தார்

இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொடர்பாக இலங்கை – இந்திய வளர்ச்சிக் கூட்டாண்மை மற்றும் கூடுதல் ஒத்துழைப்பு குறித்து வெளி விவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய் ஷங்கர் மற்றும் இந்திய வம்சாவளி தமிழ் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போது அவதானம் செலுத் தப்பட்டுள்ளது.

இதில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் அதன் பிரதி தலைவர் வே.இராதாகிருஸ்ணன், பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் மற்றும் உதயகுமார் ஆகியோரும், இலங்கை தொழிலாளர் காங்ரஸ் சார்பில் அதன் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுனருமானசெந்தில்தொண்டமான், இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் கல்வி இராஜங்க அமைச்சர் அரவிந்தகுமார் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஸ் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். இந்த சந்திப்பின் போது நரேந்திர மோடி மூன்றாவது முறையாகவும் பிரதமராக பதவியேற்றமைக்கு வாழ்த்து தெரிவித்ததோடு, இந்தியா எப்போதும் பலம் மிக்கதாக இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் தான் இலங்கையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என ஜெய்ஷங்கரிடம் தெரிவித்ததாக இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

## எம் தேசத்தில் யுத்தம் தின்ற பெற்றோர்களின் குழந்தைகள்



என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாகவுள்ளது அன்பு இல்லம். மூன்று வேளை உணவு, உடை, உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு, பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள். அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே காரணமாகும். உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! 28 யூலை 2024 இவர்களுக்காகவும் வாருங்கள்! (12,13ம் பக்கம் பார்க்க)



**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# தமிழ்த்தேசியக் கட்சிகளுடன் ஜெய்சங்கர் பேசியது என்ன?



இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று 20 யூன் 2024 மாலை இடம்பெற்றது. இதன்போது, பல்வேறு விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாணக்கியன், எம்.ஏ. சுமந்திரன், சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி. விக்கினேஸ்வரன், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, தங்களது கருத்துக்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கையளித்தார்.

மேலும், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் என்பது சட்டம் சார்ந்த விடயம். இந்து லங்கா ஒப்பந்தம் என்பது ஒரு அரசியல் சார் விடயம். இந்த இரு விடயங்களையும் ஒரே மேசையில் வைத்து கதைக்கும் போது தான் இதற்கொரு தீர்வை கண்டறியலாம் என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன் போது வலியுறுத்தியிருந்தனர்.

இந்து லங்கா ஒப்பந்தத்தை தூர வைத்து விட்டு 13ஆவது திருத்தத்தை மாத்திரம் பேசிக்கொண்டிருந்தால் அது சாத்தியப்படாது. 13ஆம் திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை தருவதற்கு இதுவரை யாருமே ஒத்துவரவில்லை. இருக்கின்ற அதிகாரங்களிலும் நிறைய விடயங்கள் பறித்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இந்திய கொள்கை வகுப்பாளர்கள், இராஜதந்திரிகள் மற்றும் அரசியல் தரப்பினரோடு நாங்கள் மனம் திறந்த உரையாடலொன்றை மேற்கொள்ள வேண்டும். 37 வருடங்களாக இந்த விடயம் இருக்கின்றது. பூகோள அரசியலில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

13ஆம் திருத்தம் தொடர்பில் அதன் சாதக மற்றும் பாதங்கள் தொடர்பில் அதனை மக்கள் வெறுப்பது தொடர்பிலும் துறை சார் ஆலோசகர்களுடன் தாங்கள் கலந்துரையாட வேண்டும் என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு இதன்போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறியப்படுத்தினர்.

இது தொடர்பான விரிவான கருத்தாடல்களை நாங்கள் மேற் கொள்ள வேண்டும். அப்போது தான் 13ஆவது திருத்தத்தின் உண்மையென்ன பொய்யென்ன, நடைமுறைச் சாத்தியமானதா என்பதை நீங்களும் உணராலம் என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் எங்களை, இந்தியாவின் முகமாகத்தான் சிங்கள அரசியல்வாதிகளும், சிங்கள மக்களும் பார்க்கின்றனர் என்பதையும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தமிழ் தரப்பினர் சுட்டிக்காட்டியிருந்தனர். அத்துடன் பொது வேட்பாளர் என்ற விடயம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இதன் போது, இந்திய வெளிவிவகார அமைச்சரிடம், பொது வேட்பாளர் என்ற விடயம் மக்களிடத்திலும் இன்று வலுப்பெற்றுள்ளது எனக் கூறப்பட்டதுடன், பொது வேட்பாளர் விடயமும் விரிவாக ஆரயப்பட்டது. இதன் போது பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.வி. விக்னேஷ்வரன், சுமந்திரன், கஜேந்திரன் உள்ளிட்ட ஒவ்வொருவரும் வேறுபட்ட கருத்து க்களை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டவர்கள் அரசியலமைப்பில் உள்ள 13ம் திருத்தச் சட்டத்தில் உள்ள மாகாண சபை முறையை நடைமுறைப்படுத்த தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர் என்று இந்த கலந்துரையாடலின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆங்கிலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைக் கேட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், உடனடியாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரத்தை சஜித் மற்றும் அனுர ஆகியோர் தருவதற்கு ஒப்புக் கொண்டார்களா என வியப்புடன் தமிழில் பதில் கேள்வியை சுமந்திரனை நோக்கி முன் வைத்தார். இதனையடுத்து, சுமந்திரன் அவ்விடத்தில் அமைதியாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இதில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தங்களது தரப்பு ஜனாதிபதி தேர்தலை பகிஸ்கரிப்பதாகவும் அந்த இடத்தில் வலியுறுத்திக் கூறியிருந்ததுடன் தங்களது தரப்பு கருத்துக்களை ஒரு அறிக்கையாக ஜெய்சங்கரிடம் கையளித்தார்.

மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் அடுத்த அச்சுப் பத்திரிகையை 28 யூன் 2024 வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்
தொடர்புகளுக்கு 416 841 9600




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# பிரிட்டன் தமிழர்களுக்கான கென்சவேர்ட்டிவ் கட்சியின் அர்ப்பணிப்பு மிகவும் உறுதியானது என்கிறார் டேவிட் கமரூன்




பிரித்தானிய தமிழர்களிற்கான கென்சவேர்ட்டிவ் கட்சியின் அர்ப்பணிப்பு மிகவும் உறுதியானது தளர்ச்சியற்றது என பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட்கமரூன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிற்கு தமிழ் சமூகத்தின் விலைமதிப்பற்ற பங்களிப்பை பாராட்டியுள்ள அவர் அனைவருக்கும் உண்மை நீதி மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தின் பொது தேர்தலிற்கு முன்னதாக வெளியிட்டுள்ள வீடியோவில் இதனை தெரிவித்துள்ள டேவிட்கமரூன் பிரிட்டனின் தமிழ் சமூகம் என்பது பெரும் வெற்றிக்கதை என குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் நாட்டின் வாழ்க்கைக்கு நீங்கள் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்குகின்றீர்கள் என தெரிவித்துள்ள டேவிட்கமரூன் வர்த்தகம் முதல் கற்பித்த மருத்துவம்.உங்கள் உயிர்துடிப்புள்ள கலாச்சாரம் போன்றவற்றின் மூலம் நீங்கள் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்குகின்றீர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

எங்கள் தேசிய வாழ்வின் பல பகுதிகளிலும் தமிழர்கள் முக்கிய பங்கினை வகிக்கிறீர்கள் எனவும் டேவிட் கமரூன் தனது வீடியோவில் தெரிவித்துள்ளார்.

எமது தமிழ் சமூகத்தின் வெற்றிகள் பிரிட்டனின் எதனை சாதிக்க முடியும் என்பதற்கான ஒரு முன்மாதிரி என குறிப்பிட்டுள்ள டேவிட் கமரூன் நாங்கள் உங்கள் அபிலாசைகளிற்கும் எதிர்காலத்திற்கான நம்பிக்கைகளிற்கும் எப்போதும் ஆதரவளிப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

15வருடங்களிற்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்தும் டேவிட் கமரூன் தனது வீடியோவில் குறிப்பிட்டுள்ளார்.

பல பிரித்தானிய தமிழர்கள் இலங்கையின் அண்மைக்கால வலிகளால் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் என்பது எனக்கு தெரியும் என குறிப்பிட்டுள்ள டேவிட் கமரூன் இந்த வருடம் இலங்கையில் மோதல்கள் முடிவடைந்து 15 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன எனது நினைவுகள் கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களை தேடுபவர்கள் குறித்ததாக உள்ளன என தெரிவித்துள்ளார்.

1948ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வடபகுதிக்கு விஜயம் மேற்கொண்ட ( 2013 ) முதல் பிரதமர் அல்லது ஜனாதிபதி நான் என தெரிவித்துள்ள டேவிட் கமரூன் யுத்தத்தின் மோசமான விளைவுகள் குறித்து நான் நேரடியாக கேட்டறிந்து கொண்டேன் என குறிப்பிட்டுள்ளார்.

அன்று நான் வழங்கிய அர்ப்பணிப்பு இன்றும் உள்ளது நீடிக்கின்றது என வீடியோவில் தெரிவித்துள்ள டேவிட்கமரூன் அனைவருக்கும் நீதி உண்மை பொறுப்புக்கூறலை பிரிட்டன் ஆதரிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார். இலங்கையில் மனித உரிமைகள் நிலைமாற்றுக்கால நீதி ஆகியவற்றிற்கான சர்வதேச முயற்சிகளிற்கு நாங்கள் தலைமை தாங்குகின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# 13வது திருத்தச் சட்டம் தோல்வி கண்ட பொறிமுறையாக இருந்த போதிலும் அதனை தமிழ் மக்கள் வென்றெடுத்த உரிமையயாக கருதுகின்றனர் - ஜே.வி.பி எம்.பி. கருத்து



13ஆவது திருத்தச் சட்டம் தோல்வி கண்ட பொறிமுறையாக இருந்த போதிலும் மாற்றுத் தீர்வை முன்வைக்காமல் அதனை நீக்க முடியாது. அவ்வாறு நீக்க முற்பட்டால் அது வேறு பிரச்சினைக்கு வழி வகுக்கக்கூடும் என தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்திய கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன். அரசியலுக்காகத் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் தேசிய மக்கள் சக்திக்குக் கிடையாது எனவும் அவர் கூறினார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மூலம் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாரில்லை. எனவே இந்த நாட்டை மாற்றுவதற்காக அனைத்து இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு புதியதொரு திசையை நோக்கி நகர வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டம் ஊடாகப் பிரச்சினைகள் தீரவில்லை. அது தோல்வி கண்டதொரு பொறிமுறையாகும். நானும் மாகாண சபையில் அங்கம் வகித்துள்ளேன். தீர்வுக்குப் பதிலாக அதன்மூலம் நிர்வாகப் பொறிமுறையில் பிரச்சினைகள் வந்துள்ளன.

13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் நிறைவேறாத போதிலும், அது வெள்ளை யானையாகக் கருதப்பட்டாலும் தற்போது வடக்கு. கிழக்கு மக்கள் 13 என்பது தாம் வென்றெடுத்த உரிமையாகவே கருதுகின்றனர். எனவே, இதற்கு மாற்றுத் தீர்வை வழங்காமல் ஒரேடியாக 13 ஐ நீக்கினால் அது வேறு பிரச்சினைக்கு வழி வகுக்கும்.

13 ஆவது திருத்தச் சட்டம் தற்போதுள்ளவாறு அமுலாக்கப்படும். பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர், அதனைக் குறுகிய காலப்பகுதிக்குள் செய்ய முடியும். புதிய அரசமைப்பு கொண்டு வரப்படும். அதன் மூலம் அனைத்து இன மக்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும். அனைவரும் சம உரிமை பெற்ற சமூகமாக வாழ முடியும் என்றார்.

# தமிழரசுக் கட்சியின் தலைமை யாரிடம்?

தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதில்லை என்று இலங்கை தமிழ் அரசு கட்சி முடிவு செய்துள்ளதாக எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெற்ற நிகழ்வொன்றில் சிவஞானம் சிறீதரன் தமிழ் பொது வேட்பாளர்தான் தங்களுடைய நிலைப்பாடு என்று தெரிவித்திருக்கின்றார். இருவரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தான்.

ஆனால் சுமந்திரன் ஆணித்தரமாக தமிழ் அரசு கட்சி முடிவெடுத்துள்ளதாக கூறுகின்றார். இதன் மூலம் என்ன விடயத்தை சுமந்திரன் நிறுவமுற்படுகின்றார்? — அதாவது இப்போதும் நான் நினைத்ததே தமிழ் அரசு கட்சிக்குள் நிகழும் அதனை எவரும் மாற்றிவிட முடியாது. ஆனால் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்கொண்டு செல்லும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் தலையசைக்கின்றார் அதேவேளை தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு எதிரான கூட்டத்திலும் முன் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார்.

விசித்திரமான தலைவர். மக்கள் மனு வடக்கு கிழக்கு சிவில் சமூகக் குழு ஒழுங்கு செய்திருந்த கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் போது தமிழ் அரசு கட்சியின் இறுதி முடிவை சொல்வதற்கு கட்சியின் தலைவர் என்னும் வகையில் மாவை சேனாதிராசா இரண்டு வார அவகாசம் கோரியிருந்தார். அதன் பின்னர் சிவில் சமூக பிரதிநிதிகள் மாவை சேனாதிராசாவை உத்தியோக பூர்வமாக சந்தித்து பேசியிருந்தனர்.

அப்போதும் இரண்டு வாரங்கள் தொடர்பிலேயே மாவை குறிப்பிட்டிருந்தார். ஆனால் இன்றுவரையில் கட்சியின் முடிவை சொல்லவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் அரசு கட்சி பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பதென்று முடிவெடுத்துள்ளதாக சுமந்திரன் கூறுகின்றார். மாவை சேனாதிராசா ஒரு பலவீனமான தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றார் என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தாலும் கூட இந்தளவு கையறு நிலையில் இருக்கின்றார் என்பது இப்போது தான் தெரிகின்றது. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்யப் போவதாக சுமந்திரன் கூறுகின்றார்.

இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கும் நிலைப்பாடுடைய தமிழ் அரசு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் என்ன செய்யப் போகின்றனர்? அவர்கள் ஆதரவான பிரசாரங்களை முன்னெடுப்பார்களா? சுமந்திரன் ஒரு வேளை கட்சியின் பெயரால் அவ்வாறான நிலைப்பாட்டை முன்னெடுக்க முற்பட்டால் அதனைத் தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு ஆதரிப்போருக்கு உண்டல்லவா? இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிலைமையோ மேய்ப்பன் இல்லாத ஆட்டுக் கூட்டம் போன்றாகி விட்டது. இந்த நிலையில் அனைவரையும் மேய்க்கும் ஆற்றல் தனக்கு மட்டுமே உண்டு என்னும் வகையிலேயே சுமந்திரன் செயல்பட்டு வருகின்றார்.

சுமந்திரனின் இலக்கு தெளிவானது. அதாவது மீண்டும் கட்சியின் புதிய தலைமைக்கான தேர்தல் நடைபெறும் போது பிடித்தெழுவதற்கு ஒரு துருப்புச்சீட்டு தேவை. சுமந்திரனை பொறுத்தவரையில் தமிழ் பொது வேட்பாளர் தான் அந்தத் துருப்புச்சீட்டு. இப்போதும் தமிழ் அரசு கட்சி தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கின்றது என்பதை நிரூபிக்க வேண்டுமாயின் சிறீதரன் ஆதரிப்பதை பலமாக எதிர்த்து தோற்கடிக்க வேண்டும். இதனை சிறீதரன் புரிந்து கொள்கின்றாரா?

வாசகர்களே! கருணையாளர்களே!

மறவாதீர்கள்!

28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை

மாலை 5.30 மணிக்கு

என்ன? என்ன? என்ன?

விபரங்களுக்கு 12, 13ம் பக்கம் பார்க்க!

# இராணுவம் மீதான யுத்தக் குற்றச் சாட்சியங்களை சேகரிக்கும் வெளியகப் பொறி முறை குறித்து சரத் வீரசேகர அலறல்

இந்நாட்டில் காணப்பட்ட பிரிவினைவாத யுத்தத்தில் போர் முறையில் போராடிய வீரர்கள் யுத்தக் குற்றம் இழைத்ததாகக் குற்றஞ்சாட்டி அவர்களுக்கு எதிராகவும் அரசியல் தலைவர்களுக்கு எதிராகவும் யுத்தக் குற்றச் சாட்சியங்களைச் சேகரிக்கும் வெளியகப் பொறிமுறையொன்று இரண்டு வருடங்களாக சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் 46-1 பிரேரணைக்கு அமைய அமைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிராகக் கணிசமானளவு சாட்சிகள் அவர்களிடம் இருப்பதாக குறித்த பொறிமுறையின் ஊடாக அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அண்மையில் அவரது தலைமையில் கூடியபோதே பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்தார். இவ்வாறு யுத்தக் குற்றம் இழைத்ததாக சாட்சி கிடைத்திருக்கும் இந்நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிராக நீதிமன்ற சட்ட அதிகாரத்தின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் வழங்குத் தொடர்வதற்கு ஏற்கனவே சில நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்திருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வெளியகப் பொறிமுறை வெளிவிவகார அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ள போதும், இந்நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிராகத் தொடர்ந்தும் சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு வருவதால் இலங்கையின் இராணுவ அதிகாரிகள் எந்த நாட்டிலும் கைது செய்யப்படலாம் என்பதே இங்குள்ள ஆபத்தான நிலைமையாகும் என இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் புலிகள் அமைப்புக்கு எதிரான யுத்தம் அன்றி தமிழ் இனத்துக்கு எதிரான யுத்தமாக அடையாளப்படுத்துவதற்கான வாய்ப்பு இந்த வெளியகப் பொறிமுறைக்கு வாய்ப்புக் காணப்படுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த நடைமுறையானது இராணுவ வீரர்களின் சுயமரியாதைக்கும், தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாகவும், இவர்கள் மீது ஏனைய நாடுகள் போர்க் குற்றச் சாட்டுக்களை முன்வைப்பதையும், சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதைத் தடுப்பதற்கும் வெளிவிவகார அமைச்சு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அறிக்கைகளுக்கு எதிராக கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பதாகவும், இது தொடர்பில் பக்கச் சார்பற்ற முறையில் செயற்படும் நாடுகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த தமது அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாவும் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

குழுவின் அமர்வுக்கு அழைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி தர்ஷன வீரசேகர இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

வலுவான தேசிய பொறிமுறையொன்று காணப்பட்டாலே வெளியகப் பொறிமுறையினால் சேகரிக்கப்படும் சாட்சிகளைத் தோற்கடிக்க முடியும் என்றும், இது தொடர்பில் எல்.எல்.ஆர்.சி



அறிக்கை மற்றும் பரணகம அறிக்கையில் உள்ள விடயங்களை உள்ளடக்கியதாக தேசிய தகவல் கோப்புத் தயாரிக்கப்பட வேண்டும் என்றார். உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இந்நாட்டுக்கு எதிராக செயற்படும் வெளியகப் பொறிமுறையை மேலும் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அமையும் என்றும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேக தெரிவித்தார்.

**மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு**
**மாதம் இரு முறையாக வெளிவரும்**
**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**அடுத்த அச்சுப் பத்திரிகையை 28 யூன் 2024**
**வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக**
**நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**
**பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம்**
**வாசிக்கலாம் தொடர்புகளுக்கு 416 841 9600**


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

**Instructor: S. Elancheliyan,** B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

**Tel: 416-524-0424**

# வடக்கு வரும் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் தமிழ்த் தலைவர்கள் 13வது திருத்தத்தின் காவாசி தாறியா? அரை வாசி தாறியா? முக்கால் வாசி தாறியா என்றே கேட்கின்றனர் முழுசா தா என எவரும் கேட்கவில்லை என்று டக்ளஸ் கிண்டல்

தென்னிலங்கை அரசாங்கமோ இந்திய அரசாங்கமோ அல்லது சர்வதேச சமூகமோ அவர்கள் அனைவரும் தங்களின் நலன்களி லேயே அக்கறையாக இருக்கின் றார்கள் என கடற்றொழில் அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்துள்ளார்.

யாழிலுள்ள தமது கட்சி அலுவல கத்தில் 15.யூன் 2024 நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து தெரி விக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

`எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர் கள் வடக்கு மாகாணத்திற்கு வந்து சென்றிருக்கின்றனர். அவர் கள் வந்து என்ன பேசியிருக்கி ன்றனர் என்பதும் ஏனைய தமிழ்க் கட்சியினர் என்ன கேட்டிருக்கின்ற னர் என்பதும் உங்களுக்கு தெரி யும்.

குறிப்பாக இங்குள்ள தமிழ்க் கட்சி யினர் அவர்களிடத்தே `காவாசி தாறியா, அரைவாசி தாறியா, முக் கால் வாசி தாறியா' என்று கேட் டிருக்கின்றனர். ஆனால் நாங்கள் அப்படி கேட்க வேண்டிய அவசி யம் இல்லை. உண்மையில் தமிழ் மக்களின் போராட்டங்கள் தியாக ங்களாலே இலங்கை இந்திய ஒப்பந்தம் ஊடாகவே இந்த 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அத் திருத்தம் நமக்கு கிடைக் கின்ற போது அரைவாசி, கால் வாசி, முக்கால்வாசி என்றெல்லாம் இருக்கவில்லை. அது முழுமை யாகத் தான் இருந்தது. அதனை நடைமுறைப்படுத்துகிற காலத் தில் இந்தியா தனது படைகளை யும் அனுப்பியிருந்தது. இவ்வாறு ஒரு பக்கம் தன்னுடைய படை களை அனுப்பிய அதேநேரத்தில் இராஜதந்திர ரீதியாகவும் நடவடி க்கைகளை எடுத்திருந்தது. ஆனால் துரதிஸ்டவசமாக பிரச்சி னைகளை தீர்க்க விரும்பாதவர் கள் அதிலே ஒன்றுமில்லை என்று



அன்றைக்கு கூறி விட்டார்கள்.

அது மாத்திரமல்லாமல், தும்புதடி யால் கூட தொட மாட்டோம் என் றும் கூறியிருந்தனர். அன்று இவ் வாறு கூறியவர்கள் இன்று என்ன கேட்கின்றனர் என்று பாருங்கள். இங்கு ஒரு விடயத்தை நான் கூறி வைக்க வேண்டும். அதாவது நீண்ட காலத்திற்கு பின்னர் என்னு டைய நண்பர் சுரேஷ் பிரேமச் சந்திரனும் நானும் ஒரு நிகழ்வில் அருகருகே அமர்ந்திருந்து உரையாடும் சந்தர்ப்பமொன்று ஏற்பட்டிருந்தது.

அப்பொழுது அன்றைக்கே இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நாம் ஏற்று இருக்கலாம் என்றும் நாங்கள் எங்கேயோ சென்று இரு க்கலாம் எனவும் கூறியிருந்தேன். அதற்கு அவருடைய பதில் என்னுடைய கருத்தை அவர் ஏற்றுக் கொள்வதாகவே இருந் தது. உண்மையில் இதனையே அவர் மனதுக்குள்ளே அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். அதனை செய்ய வேண்டிய நேரத்தில் அனைவருமாக செய்யாமல் நாங்கள் எல்லாம் கோட்டை விட்டு விட்டது என்பது எங்ளுக்கு அவமானம் என்று தான் நினைக்கிறேன்.

இன்றைக்கு அந்த சட்டம் கொண்டு வரப்பட்ட போது உண் மையாகவே இதில் தவறிழைத்தது இலங்கையோ இந்திய அரசு அல் லது சர்வதேசமோ அல்ல. அதில் தமிழர் தரப்பு தான் முழுமையாக தவறிழைத்து விட்டிருக்கிறோம். இலங்கை இந்தியா ஒப்பந்தத்தோடு தென் இலங்கை ஆட்சியாளர களின் குணாதிசய ரீதியான மாற்ற ங்கள் அன்று ஏற்பட்டிருந்தன.

ஆனால், அந்த வாய்ப்பை நாம் பயன்படுத்த தவறி விட்டோம். எங்களுக்கு நாங்களே வினை விதைத்துக் கொண்டோமே தவிர வேறு யாரும் அல்ல. ஆக தென் னிலங்கை அரசாங்கமாக இருக்க லாம் இந்திய அரசாங்கமாக இருக் கலாம் அல்லது சர்வதேச சமூக மாக இருக்கலாம் இவர்கள் அனைவரும் தங்களின் நலன் களிலேயே அக்கறையாக இருப் பார்கள் எங்கள் நலனில் அக்கறை யாக இருக்க மாட்டார்கள். இன்று பாலஸ்தீனத்திலும் காசாவிலும் சர்வதேச சமூகம் என்ன செய்து கொண்டிருக்கிறது.

அந்த போரில் அழிவு முற்றுப் பெறும் வரை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்கிறது. அது தான் நமக்கும் நடந்து முடிந்திருக்கிறது. எனவே இவர் களை நம்பிக் கொண்டிப்பதை விடுத்து நாம் எமது பிரச்சினை களை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என சிந்தித்து அதற் கேற்ற வகையில் செயற்பட வேண் டியது அவசியம் என தெரிவித் துள்ளார்.

# சட்டத்தில் உள்ள 13ஐ நடைமுறைப்படுத்தும் போது ஏன் பிரச்சனை வருகிறது? சஜித் கேள்வி




எமது சட்டப் புத்தகத்திலேயே இருக்கின்ற அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துகின்றபோது ஏன் பிரச்சினைகள் வருகின்றன? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலை வருமான சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

எனவே மக்கள் ஓரணியில் திர ண்டு இனங்களுக்கும் மதங்களு க்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டியது மிக மிக அவசியம்` என்றும் வலியுறு த்திய அவர் கமராக்களுக்காக அல் லாமல் மனதளவில் அத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்` என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத் தம் என்பது எமது சட்டப் புத்தகத்தில் இன்று அல்லது நேற்று வந்த ஒன்றல்ல. இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற போது ஏன் பிரச்சினைகள் வருகின்றன.? நாட்டிலுள் இனங்களும் மதங் களும் ஏனைய இனங்களையும் மதங்களையும் மதிப்பதில்லை. அதுவே இதற்கான பிரதான காரணமாக உள்ளது. ஆகவே சற்று சிந்தித்துப் பாருங்கள். சிங்கள மொழி பேசும் எமது சிங்கள மக்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் நம்பி க்கையின்றிச் செயற்படுகின்றனர்.

அதே போன்றே தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் நம்பி க்கையின்றி செயற்படுகின்றனர். அவ்வாறே முஸ்லிம் மக்களும் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் தொடர்பில் நம்பிக்கையின்றிச் செயற்படுகின்றனர்.

இவ்வாறு ஒவ்வொருவரும் நம்பிக் கையற்ற நிலையிலேயே இருக்கின்றனர். இதுவே இங்கு ள்ள பாரிய பிரச்சினையாகும். எனவே அனைவரும் ஒன்றி ணைய வேண்டும். இதனூ டாகவே நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். அதுவே மிக முக்கிய மான விடயமாக உள்ளது. மேலும் கமராக்களுக்காக அதனை ஏற்படு த்தாமல் மனதளவில் அவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

# பேரம் பேசும் அரசியல் திறன்

ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்திருக்கும் நிலையில் பிரதான வேட்பாளர்கள் வடக்கை வலம் வரு கின்றனர். அரசியல் கட்சிகளின் பணிமனைகளுக்கு மட்டுமல்ல மாறாக தமிழ்த் தேசிய அரசியல் பரப்பி லுள்ள கட்சிகளின் தலைவர்களின் வீடுகளுக்கும் சென்று தங்களுக்கான ஆதரவை கோருகின்றனர்.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தான் அனைவரும் வடக்கு தலைவர்களின் படலைகளை தட்டுகின்றனர்.

ஆனால, அவர்கள் கிழக்குக்கு பிரத்தியேக பயண த்தை மேற்கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் பிரச்னை என்பது வடக்கு தமிழ் மக்களின் பிரச்னை மட்டும் தான். தமிழ் மக்களின் பிரச்னையை வடக்குக்கான பிரச்னையாக குறுக்குவதில் அவர்கள் கணிசமான வெற்றியை பெற்றுவிட்டனர். மேற்குலக இராஜதந்திர தரப்புகளின் அணுகுமுறையும் ஏறக்குறைய அவ்வாறு தான் இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலை பொறுத்தவரையில் இம்முறை தேர்தல் மிகவும் சவாலானது மிகவும் நெருக்கடி யானது. ஏனெனில், தற்போதுள்ள நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாது விட்டால் எந்த வொரு வேட்பாளரும் ஐம்பது வீதமான வாக்கு களை பெறமுடியாது போகலாம். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மான கரமான பங்கைக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்புலத்திலதான் அனைவரும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் வீடு தேடிச் செல்கின்றனர். ஆனால், இந்த விடயத்தை உச்ச பட்ச மாக கையாள வேண்டிய தமிழ்த் தலைவர்கள் என்போர்களோ வழமை போல் நித்திரை கொள்கின்ற னர். பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனோ தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடி க்காமல் விட மாட்டேன் என்பதில் ஒற்றைக்காலில் நிற்கின்றார்.

ஏன் இந்தளவு ஆக்ரோஷமாக இருக்கின்றார்? அவருக்கு ஏதேனும் இரகசிய நிகழ்ச்சி நிரல் உண்டா? இதன் காரணமாகத்தான் அவர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்ப்பதில் இந்தளவு உறுதியாக இருக்கின்றாரா? உண்மையில், தமிழ் அரசியல்வாதிகள் முக்கியமாக, சுமந்திரன் போன்றவர்கள் புத்திசாலித்தனமான அரசியல்வாதிகள் என்றால் ஒருபோதுமே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்த்திருக்க மாட்டார்கள்.

அதற்கு மாறாக, தமிழ் பொது வேட்பாளர் நிலைப் பாட்டை ஆதரிப்பதன் ஊடாக தென்னிலங்கையை இறங்கிவரச் செய்யும் உத்தி தொடர்பில் சிந்தித்தி ருப்பார்கள்.

தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்பதற்கு மாறாக அனைவரும் ஓரணியாக நின்றிருந்தால் தென்னில ங்கையின் வேட்பாளர்கள் நிச்சயமாக கீழிறங்கியிரு ப்பர். தாங்கள் நிச்சயம் தோல்வியடைந்து விடுவோம் என்னும் நிலைமை ஒன்று தான் அவர்களை இறங்கி வரச் செய்யும்.

ஆனால் அவர்கள் தமிழ் பொது வேட்பாளர் நிலைப் பாட்டை பார்த்து, அச்சப்பட முடியாதளவுக்கு சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் தென்னிலங்கை க்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருக்கின்றனர்.

அதாவது, நீங்கள் அச்சப்பட வேண்டாம் நாங்கள் தமிழ் பொது வேட்பாளரை தோற்கடிப்போம் என்று அவர்களுக்கு வாக்குறுதி வழங்கப்படுகின்றது. நிலைமை இவ்வாறு தொடர்ந்தால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்களை எவ்வாறு நோக்கு வார்கள்?

இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் கூட அரசிய லில் பேரம் பேசுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளத் தெரியாது போனால் நமது அரசியல்வாதி கள் தொடர்பில் என்ன கூறுவது?

மாதம் இருமுறை வெளியாகும் உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை 28 யூன் 2024
வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக
அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

# தமிழ் சமூக மையத்திற்கான குடும்ப நன்கொடைத் திட்டத்தின் ஆரம்பம்




வணக்கம் அன்பு உறவுகளே! கனடாவில் வாழும் தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவுகளில் ஒன்றாக தமிழ் சமூக அமையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. மூன்று நிலை அரசுகளின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழ் சமூக மைய கட்டுமானத்தில் தமிழ் சமூகமாக நாம் எமது பங்களிப்பினை வழங்குவதற்கான காலம் உருவாகியுள்ளது.

விழுதுகளாக அடையாளப்படுத்தப்படும் நிறுவுனர் குடும்பங்களிடம் இருந்து முதல் கட்ட நன்கொடைகளை பெற்றுக் கொள்ள தமிழ் சமூக மையம் திட்டமிட்டுள்ளது. இதில் இணையும் குடும்பங்கள் ஒவ்வொன்றும் தமிழ் சமூக மையத்தை உருவாக்குவதற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளில் 10,000 டொலரை வழங்க முடியும்.

இந்த நன்கொடையளிப்பின் மூலமாக 2,500 குடும்பங்களை இணைத்து அதன் மூலமாக 25,000,000 டொலரை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிதிப்பங்களிப்பின் மூலம் தமிழ் சமூக மையத்தின் அரங்க நிர்மாணப்பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கனடாவில் உருவாகவுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழ் சமூக மையத்தின் நிறுவுனர் குடும்பங்களில் ஒன்றாக நீங்கள் மாறுவதற்கு விரும்பினால் tamilcentre.ca இணைப்பின் மூலமாக பதிவினை மேற்கொள்ள முடியும். தலைமுறைகள் தாண்டியும் கனேடிய மண்ணில் தமிழ் மக்களின் பெருமைக்குரிய அடையாளமாக திகழப் போகும் தமிழ் சமூக மையத்தினை வெற்றிகரமாக கட்டி முடிப்பதற்கு உங்கள் அனைவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது.

இந்த தகவலை உங்கள் உறவினர்கள் நண்பர்களுடனும் பகிர்ந்து கொளவதன் மூலம் அவர்களையும் இந்த திட்டதில் இணைத்துக் கொள்ளுங்கள்.

இந்த திட்டம் குறித்து உங்கள் சமூக ஊடகங்கள் மூலமாகவும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் இந்த இலக்கினை நாம் விரைவில் உட்டுவதற்கு உதவுமாறு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

நன்றி – தமிழ் சமூக மையம்.

**மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் அடுத்த அச்சுப் பத்திரிகையை 28 யூன் 2024 வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

### கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# எது பேரழிவு? யாருக்குப் பேரழிவு?

ரணில் தேர்தலை வைப்பாரோ இல்லையோ அவர் என்ன தந்திரங்களைச் செய்வாரோ இல்லையோ வடக்கில் தேர்தல்களம் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. குறிப்பாக பொது வேட்பாளர் என்ற விடயத்தை மையப்படுத்தி தேர்தல் களம் சூடு பிடித்த தொடங்கி விட்டது.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் பொது வேட்பாளரை எதிர்க்கிறவர்கள் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்குத் தான் தமிழ் வாக்குகளைச் சாய்த்துக் கொடுக்கப் போகிறார்கள். எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளர் தமிழ் தரப்பு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சமரசத்துக்கு தயாராக இருக்கிறாரோ அவருக்கு தமிழ் வாக்குகளை சாய்த்து கொடுப்பது என்று மேற்படி தமிழ் அரசியல்வாதிகள் வெளிப்படையாக கூறுகிறார்கள். எனவே அவர்கள் தமிழ் வாக்குகளை சாய்த்துக் கொடுக்கப் போகும் மூன்று தென்னிலங்கை வேட்பாளர்களையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

அதில் முதலாவதாக ரணில். அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னிருந்து இனப்பிரச்சினையை வடக்கின் பிரச்சினையாகச் சுருக்கிப் பேசி வருகிறார். மேலும் அதை ஒரு விதத்தில் பொருளாதாரப் பிரச்சினை என்ற தொனிப் படவும் பேசுகிறார். மாகாண சபைகளை பலப்படுத்தும் விடயத்தில் ரணில் தன்னை ஏமாற்றி விட்டதாக விக்னேஸ்வரன் கூறுகிறார்.

யாப்பில் உள்ளபடி மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் பலவற்றை கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வந்த இலங்கை அரசாங்கங்கள் உருவி எடுத்து விட்டன. அவ்வாறு எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெறுவதற்கு ஒரு குழுவை உருவாக்கி, அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இயங்குவது என்று ரணில் விக்னேஸ்வரனுக்கு ஒப்புதல் கொடுத்தார். ஆனால் தன்னைப் பல மாதங்களாக அவர் ஏமாற்றி வருகிறார் என்று விக்னேஸ்வரன் கூறுகிறார். ரணில் இப்பொழுது தெளிவாக கூறுகிறார், காணி அதிகாரம் பொலீஸ் அதிகாரம் இல்லை என்று. அதாவது 13மைனஸ்

சஜித்தும் தெளிவாகக் கூறுகிறார். இரண்டு அதிகாரங்களும் இல்லை. சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்கு வேண்டுமானால் பொலீஸ் அதிகாரம் தரலாம். அதாவது சுற்றுச்சூழல் பொலீஸ். இதற்குமப்பால் சஜித்திடமும் அது தொடர்பாக தெளிவான வாக்குறுதிகள் இல்லை.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த பொழுது. அவர் யாழ்ப்பாணம் பிஷப் ஹவுஸில் கத்தோலிக்க மத குருக்களைச் சந்தித்தார். சந்திப்பின் போது அவர் வாக்குறுதியளிக்கும் 13 பிளஸ் இற்குள் காணி பொலீஸ் அதிகாரங்கள் உண்டா என்று ஒரு மதகுரு கேட்டிருக்கிறார். காணி அதிகாரம், பொலீஸ் அதிகாரம் போன்றன உடனடிக்கு விவாதிக்கப்படக்கூடிய விடயங்கள் அல்லவென்றும், அவை தேசிய மட்டத்தில் ஆழமாக விவாதிக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். அதாவது 13 மைனஸ்.


மூன்றாவது அனுர அவர் மாகாண சபையை இப்போது இருக்கும் வடிவத்தில் ஏற்றுக் கொள்வார் போல் தெரிகிறது. ஆனால் அவருடைய கட்சி நீதிமன்றத்திற்கு சென்று பிரித்த வடக்கு கிழக்கை மீண்டும் இணைப்பது தொடர்பாக ஒரு வார்த்தையும் கூற வில்லை. அது தமிழ் மக்களின் தாயகம் என்றும் அவர் கூறவில்லை. அதோடு ஏனைய இரண்டு வேட்பாளர்களைப் போலவே காணி பொலீஸ் அதிகாரம் தொடர்பாக அவரிடமும் தெளிவான வாக்குறுதிகள் இல்லை. அதாவது மூன்று பிரதான தென்னிலங்கை வேட்பாளர்களும் நடப்பில் பிரயோகத்தில் உள்ள 13ஐக்கூடக் கடக்கத் தயாரில்லை. சமஷ்டி எல்லாம் தரமாட்டார்கள். ஆனால் யாப்பை திருத்துவோம் என்று பொதுப்படையாகச் செல்வார்கள்.

ஆயின் யாராவது தென்னிலங்கை வேட்பாளருக்கு தமிழ் வாக்குகளைத் திரட்டிக் கொடுக்க முற்படும் தமிழ் அரசியல்வாதிகள் இந்த மூவரில் யாரை நோக்கிக் கையை நீட்டப் போகிறார்கள்? எல்லாருமே 13மைனஸ் தானே? யாரும் சமஸ்டியைத் தருவதாகக் கூற வில்லையே?

அவர்கள் தங்களுடைய சிங்கள வாக்காளர்களுக்கு உண்மையாக இருக்கிறார்கள். நேர்மையாக இருக்கிறார்கள். பொய் சொல்லவில்லை. இதைத் தான் தமிழ் மக்களுக்கு கொடுப்பேன் என்று உறுதியாகக் கூறுகிறார்கள்.

சரி அவர்களுக்கு தமிழ் வாக்குகளை சாய்த்துக் கொடுக்க வேண்டும் என்று தலைகீழாக உழைக்கும் தமிழ் அரசியல்வாதிகள் இதில் யாரைத் தெரிவு செய்யப் போகிறார்கள் ?

யாரையும் தெரிவு செய்ய முடியாது. ஆனால் அவர்கள் பொது வேட்பாளரை எதிர்க்கிறார்கள். அதாவது தென்இலங்கை வேட்பாளர்களில் யாரோடும் சமரசம் செய்ய முடியாத நிலை. அதற்காக தமிழ் பொது வேட்பாளரையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் இதன் பொருள் என்ன ?




சில தமிழ் அரசியல்வாதிகள் கூறுவது போல தென்னிலங்கை வேட்பாளர்கள் எதைத் தரக்கூடும் என்பதைப் பார்த்து முடிவெடுப்போம் என்று அவர்கள் கூறுவது உண்மை இல்லையா? அப்படியென்றால் வேறு எந்த அடிப்படையில் அவர்கள் முடிவெடுக்க போகின்றார்கள்?

யாழ்ப்பாணம் பிஷப் கவுசில் கலந்துரையாடும் பொழுது சஜித் பிரேமதாச பொது வேட்பாளர் என்ற விடயத்தை முன்னிறுத்துவது தமிழ் மக்களுக்கு உள்ள ஜனநாயக உரிமை என்று கூறியிருக்கிறார். அதே சமயம் தனிப்பட்ட முறையில் அது பொது வேட்பாளர் மட்டுமல்ல பொதுவான பேரழிவாகவும் அமையும் என்று கூறியிருக்கிறார்.

அது என்ன பேரழிவு? தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை ஒரு பொது வேட்பாளருக்கு கொடுப்பதனால் என்ன அழிவு வந்து விடப் போகிறது? யாருக்கு அழிவு வரப்போகிறது? தமிழ் மக்களுக்கா? அல்லது தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கா? அல்லது தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு விசுவாசமாக நிற்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கா?

தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது தான் தங்களுடைய முதன்மை நோக்கம் என்று பொது வேட்பாளர் அணியினர் கூறுகிறார்கள்.மேலும் தமிழ் அரசியலில் நேர்மையான கண்ணியமான ஒரு அரசியல் பாரம்பரியத்தை பலப்படுத்துவதுதான் தங்களுடைய அடுத்த நோக்கம் என்று கூறுகிறார்கள்.

அதாவது நமது வாக்காளர்களுக்கு பொறுப்புக்கூறும் ஓர் அரசியல் பாரம்பரியத்தை பலப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இவை எப்படிப் பேரழிவில் முடியும்? தமிழ் மக்கள் தங்களைப் பலப்படுத்துவது பேரழிவா? தமிழ்மக்கள் தங்களை ஒற்றுமைப்படுத்துவது பேரழிவா? தமிழ் அரசியலை ஒரு சரியான பண்பாட்டில் தடம் ஏற்றுவது பேரழிவா? தென்னிலங்கை வேட்பாளர்களிடம் ஏமாற மாட்டோம் என்று கூறுவது பேரழிவா?

சஜித் அதைத் தனிப்பட்ட அபிப்பிராயமாகச் சொல்லியிருக்கலாம். ஆனால் அதுதான் மூன்று தென்னிலங்கை வேட்பாளர்களின் அபிப்பிராயம். சஜித்துக்கு போகக்கூடிய வாக்குகளை தமிழ் பொது வேட்பாளர் கவர்வாராக இருந்தால், அது தனக்கு வெற்றி வாய்ப்புகளை அதிகப்படுத்தலாம் என்று கருதக் கூடிய தென்னிலங்கை வேட்பாளர்கள் உள்ளூர சந்தோஷப்படலாம். ஆனாலும் தமிழ் மக்கள் ஒரு தேசமாக பலப்படுத்தப்படுவதை அவர்கள் பேரழிவாகத் தான் பார்ப்பார்கள்.

ஏனென்றால், தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ள மறுப்பதில் இருந்து தான் இலங்கை இனப் பிரச்சினை தொடங்குகின்றது. இலங்கை இனப் பிரச்சனை என்பது இலங்கைத் தீவின் பல்லினச் சூழலை ஏற்றுக் கொள்ள மறுப்பது தான். இச்சிறிய தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் உண்டு என்பதனை ஏற்றுக் கொள்ள மறுப்பது தான். இன்னும் சுருக்கமாகச் சொன்னால் தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொள்ள மறப்பது. ஆனால் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வவுனியாவில் கூடிய குடிமக்கள் அமைப்புகள் தமிழ் மக்களை ஒரு தேசம் என்று அழைக்கின்றன. ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் உச்சபட்சமான ஒரு தீர்வைக் கேட்கிறார்கள்.

அவ்வாறு உச்ச பட்சமான தீர்வைக் கேட்பது அல்லது தங்களை ஒரு தேசமாக மேலும் பலப்படுத்திக் கொள்வது போன்றன பேரழிவாக முடியும் என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் கருதுவது புதியதல்ல. தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதை அழிப்பது தான் இனப்படுகொலையே. தமிழ் மக்களை ஒரு தேசமாகக் கூட்டிக் கட்டும் அம்சங்களை அழித்து விட்டால் தமிழ் மக்கள் நீர்த்துப் போய் விடுவார்கள் சிதறிப்போய் விடுவார்கள். கடந்த 15 ஆண்டுகளாக அதைத்தான் அரச திணைக்களங்களும் புலனாய்வு கட்டமைப்பும் அரசாங்கத்துக்குச் சேவகம் செய்யும் தமிழ் அரசியல்வாதிகளும் செய்து வருகிறார்கள். எனவே தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வது தென்னிலங்கைக்கு பிடிக்காது. ஆனால் அது தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கும் பிடிக்கவில்லை. ஏன்?

பொது வேட்பாளரைத் தவிர வேறு எந்த ஒரு தெரிவும் தமிழ் வாக்குகளை பல துண்டுகளாக உடைக்கும். எப்படி என்றால் தமிழ் வாக்காளர்களில் ஒரு பகுதி இயல்பாகவே வாக்களிப்பில் கலந்து கொள்ளாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கேட்குமோ இல்லையோ ஒரு தொகுதி இயல்பாக வாக்களிப்பதில்லை. இது ஒரு தொகுதி.

இரண்டாவது தொகுதியினர், அது சிறிய தொகுதியாக இருந்தாலும் அனுரவுக்கு வாக்களிப்பார்கள்.

மூன்றாவது தொகுதியினர், ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை நிமித்தப் பாடுபடுகிறார் என்று நம்பக்கூடிய மிகச்சிறிய தொகை படித்த ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த தமிழர்கள். அவர்கள் ரணிலுக்கு வாக்களிக்கக் கூடும்.

நான்காவது தொகுதி தமிழ் அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டும் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்க போகிறது.

ஐந்தாவது தொகுதி தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும். இந்த விடயத்தில் தமிழ் மக்கள் ஒருமித்த முடிவை எடுக்கவில்லையென்றால் தமிழ் வாக்குகள் மேற்கண்டவாறு ஐந்து தரப்புகளால் பங்கிடப்படும். இது எங்கே கொண்டு போய்விடும்?

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு கட்சிக்குள் நடந்த ஒரு தேர்தல் தமிழ் மக்கள் கேவலமான விதங்களில் துண்டாடப்படுகிறார்கள் என்பதைக் காட்டியது. அதுபோல இந்த ஆண்டின் இறுதியில் நடக்கக்கூடிய ஜனாதிபதி தேர்தல் தமிழ் மக்கள் தோல்வி கரமான விதத்தில் சிதறடிக்கப்படுகிறார்கள் என்ற செய்தியை வெளியே கொண்டு வரக் கூடும்.

அதை தடுக்க வேண்டுமானால் ஏதோ ஒரு மையத்தில் தமிழ் வாக்குகளைத் திரட்ட வேண்டும். எந்த மையத்தில் அதை திரட்டுவது?

சஜித்துக்கு வாக்களியுங்கள் என்று கேட்டு தமிழ் மக்களைத் திரட்டலாமா? அல்லது ரணிலுக்கு, அல்லது அனுரவுக்கு வாக்களியுங்கள் என்று கேட்டுத் திரட்டுவதா? அல்லது பகிஷ்கரிப்பு என்று கேட்டுத் திரட்டுவதா? அல்லது பொது வேட்பாளரை நோக்கித் திரட்டுவதா? இதில் எது அதிகம் பாதுகாப்பானது?

ஒரு பொது வேட்பாளரை நோக்கித் திரட்டுவது தான் அதிகம் பாதுகாப்பானது. ஒரு பொது வேட்பாளரை நோக்கித் தமிழ் வாக்குகளைச் சிந்தாமல் சிதறாமல் திரட்ட முடிந்தால், அது இந்த ஆண்டின் இறுதியில் தமிழ் மக்கள் பெற்ற மகத்தான வெற்றியாக அமையும். அந்த வெற்றி அடுத்தடுத்த ஆண்டுகளில் நடக்கக்கூடிய எல்லா தேர்தல்களிலும் எதிரொலிக்கும். இல்லையென்றால், ஏற்கனவே சிதறிப் போயிருக்கும் தமிழ் வாக்குகள் மேலும் சிதறடிக்கப்பட்டால், அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இப்போது இருக்கிற தமிழ் பிரதிநிதித்துவமும் இல்லாமல் போய்விடலாம். குறிப்பாக திருக்கோணமலையில் தமிழரசுக் கட்சிக்குச் சவாலாக ஏனைய தமிழ்த் தேசியக் கட்சி ஏதாவது இறங்கினால் இப்பொழுது (22ம்பக்கம் பார்க்க)

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

15 யூன் 2024 - 21 யூன் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 29வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.வைமன் வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாள் 22 யூன் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சுந்தரம்பிள்ளை இலட்சுமணன் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார்

இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 20 யூன் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருபாமலர் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மராஜ் ராஜா (பத்தன்)

யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்தன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 21 யூன் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பத்மராஜ் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குலசேகரம்பிள்ளை மங்கையற்கரசி

புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது 11வது ஆண்டு நினைவுநாள் 20 யூன் 2024 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வனதலெட்சுமி பத்மநாதன்

யாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வனதலெட்சுமி பத்மநாதன் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 17 யூன் 2024 திங்கட்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வனதலெட்சுமி பத்மநாதன் அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சத்தியநாதன் முருகேசு

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சத்தியநாதன் முருகேசு அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 17 யூன் 2024 திங்கட்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சத்தியநாதன் முருகேசு அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்





14 யூன் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி தேவநாயகி செல்வராசா அவர்களது இனிய பிறந்த நன்னாளாகும். அன்றையதினம் திருமதி தேவநாயகி செல்வராசா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





15 யூன் 2024 சனிக்கிழமை கொல்லன்கலட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்லமுத்து வடிவேலு அவர்களது 88வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் அன்னை திருமதி செல்லமுத்து வடிவேலு அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




17 யூன் 2024 திங்கட்கிழமை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வனதலெட்சுமி பத்மநாதன் அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கினார்கள்




17 யூன் 2024 திங்கட்கிழமை உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சத்தியநாதன் முருகேசு அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கினார்கள்





19 யூன் 2024 புதன்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




20 யூன் 2024 வியாழக்கிழமை புங்குடுதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கினார்கள்




20 யூன் 2024 வியாழக்கிழமை இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கினார்கள்




21 யூன் 2024 வெள்ளிக்கிழமை யாழ்.உடுவிலைச் சேர்ந்த பத்தன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு பத்மராஜ் ராஜா அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச்சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 யூன் 2024 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவக்கொழுந்து செல்லத்துரை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

Amma Pawn Broker
1.5% 2%
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

N.K.S DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

Century 21
Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

747 AUTOPARTS
Need Auto Parts? Look No Further!
Markham Rd: 905-471-4447
Markham - Heritage Rd: 905-294-5773
Newmarket - Davis Rd: 905-836-7447
Scarborough - Lawrence Ave: 416-285-4447
Scarborough - Milliken Blvd: 416-335-7747
Ajax - Fuller Road: 905-686-4447
www.747autoparts.com

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
Foresters KABIS

தமிழீழத்தின் மூத்த தேசப்பற்றாளர் **தமிழேந்தல் ஈழவேந்தன்** நினைவரங்கில்



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்





# தமிழும் இசையும்
## இராப்போசன விருந்தும்





## இன்பத் தமிழ்ப் பேச்சு

சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர்,
சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை

**பர்வின் சுல்தானா**

நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் **சரிகமப** புகழ்

**கோபாலகிருஷ்ணன்**

கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்

## இன்னிசை மாலை

**யூலை 28, 2024**
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM
**METROPOLITAN CENTRE**
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

அன்பளிப்பு
$100
$150 VIP

தொடர்புகளுக்கு-
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kipling & Steeles - 5010 Steeles Ave.
Call 416 NANTHA 1 - 416 626 8421

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6781
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான
விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203
Toronto ON M1B 3V9
Office: 416.287.2222
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com.
Licenced Funeral Pre-Planner
647-713-6049


TIMES IRON WORKS INC.
Fabricators & Erectors
Times Metals Sales

ஓம் சக்தி

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## குரோதி வருட மகோற்சவ விஞ்ஞாபனம்

விரவிநின்றொளிரும் வீரமும் துணிவும் மேதினி வாழ்பவர்க் கருளி
பறந்திடு விமானம் பதிந்து பின் இறங்கி பாங்குடன் ஏறிடும் வகையில்
தரைவழி கொண்ட மிசிசாகா பதியில் தான் நிலைத் தெம் மனம் கொள்ளும்
செருக்கழித்தாண்டு சீரருள்புரியும் ஜெயதுர்க்கை அம்பிகைத் தாயே.



**கொடியேற்றம்**
30-06-2024
ஞாயிறு

**மஞ்சம்**
09-07-2024
செவ்வாய்

**சப்பறம்**
12-07-2024
வெள்ளி

**தேர்**
13-07-2024
சனி

**தீர்த்தம்**
14-07-2024
ஞாயிறு

**பூங்காவனம்**
16-07-2024
செவ்வாய்

அம்பிகை அடியார்களே!

சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கனடா நன்நாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒன்ராரியோ மாநில மிசிசாகா மாநகரில் திருக்கோவில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை ஈய்ந்தருளும் ஜெயதுர்க்கா அம்பாளுக்கு மகோற்சவம் நிகழ திருவருள்கூடியுள்ளது. குரோதி வருடம் ஆனித் திங்கள் 17ம் நாள் (30-06-2024) அச்சுவினி நட்சத்திரமும், கிருஸ்ணபக்ஷம் தசமித் திதியும் சித்தயோகம் கூடியுள்ள நன்நாள் ஞாயிறன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி மாதம் 31ம் நாள் (14-07-2024) ஞாயிறன்று தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் பகலும் இரவும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து அம்பாள் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6**
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.ca

## கிரியா கால நிர்ணயம்







| | |
|---|---|
| அங்குரார்ப்பணம் : 29-06-24 | சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு விநாயகர் வழிபாடு (கணபதி ஹோமம்), மாலை கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம். |
| கொடியேற்றத் திருவிழா 30-06-2024 | ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணி காலை பூஜை<br>8:30 ஸ்நபன அபிஷேகம். 9:30 மணி மூலமூர்த்தி பூஜை. 10:15 பேரிதாடனம்.<br>10:30 மணி வசந்தமண்டப பூஜை தொடர்ந்து சுவாமி எளுந்தருளல், ஸ்தம்ப பிரதிஷ்டை, படப்பிரதிஷ்டை, நண்பகல் 11:30 மணிக்கு கொடியேற்றம் (துவஜாரோகணம்), தொடர்ந்து நவசந்திஆவாகணம். விநாயகர், அம்பிகை வீதி உலா, அருட் பிரசாதம் வழங்கல்.<br>மாலை 4:30 மணி ஸ்நபனா அபிஷேகம், 5:15 மணி யாகபூஜை,<br>6:30 மணி மூலமூர்த்தி பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை.<br>8:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பிகை வீதி உலா, அருட்பிரசாதம் வழங்கல். |
| இரண்டாம் திருவிழா : 01-07-2024 | திங்கட்கிழமை 8:30 மணி காலை பூஜை. 9:30 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்.<br>பகல் 11:00 மணி மூலமூர்த்தி பூஜை. 11:30 ஸ்தம்ப பூஜை. நண்பகல் 12:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பிகை வீதி உலா, அருட்பிரசாதம் வழங்கல்.<br>மாலை 5:15 மணி ஸ்நபன அபிஷேகம், 6:30 மணி மூலமூர்த்தி பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை. 8:00 மணி வசந்த மண்டப பூஜை,<br>அம்பிகை வீதி உலா, அருட் பிரசாதம் வழங்கல். |
| 01-07-2024 முதல் 12-07-2024 வரை | இரண்டாம் திருவிழா முதல் பதின்மூன்றாம் திருவிழா (சப்பறத் திருவிழா) வரை பகல் இரவு உற்சவங்கள் ஒரே நேர அட்டவணைப்படி நடைபெறும்.<br>இரவு 7:30 - 8:00 மணி வரை கலை நிகழ்ச்சி |
| தேர்த்திருவிழா (இரதோற்சவம்) 13-07-2024 | காலை 6:30 மணி காலைப் பூஜை.<br>7:00 மணி ஸ்நபனா அபிஷேகம், 8:30 மணி மூலமூர்த்தி பூஜை, தொடர்ந்து ஸ்தம்ப பூஜை, 10:00 மணி வசந்த மண்டப பூஜை,<br>11:30 மணிக்கு அம்பாள் சித்திரத் தேரில் அருட்காட்சி, தொடர்ந்து இரதபவனி இடம்பெறும். பிற்பகல் 1:30 மணி அம்பாளுக்கு பச்சைசாத்தி, இரதஅவரோகணம், தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கல்.<br><br>மாலை 7:00 மணி மூலமூர்த்தி பூஜை, ஸ்தம்ப பூஜை.<br>8:00 மணி வசந்த மண்டப பூஜை, அம்பாள் தேரடிபார்த்தல் உற்சவம்,<br>அருட்பிரசாதம் வழங்கல். |
| தீர்த்தத் திருவிழா 14-07-2024 | ஞாயிறுக்கிழமை காலை 6:30 மணி காலைப்பூஜை, 7:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம் .<br>8:30 மணி மூலமூர்த்தி பூஜை, ஸ்தம்ப பூஜை, பேரிதாடனம், சூர்னோற்சவம், தொடர்ந்து வசந்தமண்டப பூஜை, தீர்தோற்சவம். யாக மகாபூர்ணாகுதி, யாககும்ப அபிஷேகம், அருட்பிரசாதம் வழங்கல்.<br>மாலை 6:00 மணி மூலமூர்த்தி பூஜை,<br>6:30 மணி வசந்த மண்டப பூஜை தொடர்ந்து ஸ்தம்ப பூஜை,<br>கொடியிறக்கம் (துவஜஅவரோகணம்). நவசந்தி விதர்சனம், மௌன உற்சவம், சண்டேஸ்வர உற்சவம், ஆச்சார்ய கௌரவம், ஆசீர்வாதம், அருட்பிரசாதம் வழங்கல். |
| 15-07-2024 | திங்கள் - காலை **8:00** மணி பிராயச் சித்த அபிஷேகம் |
| 16-07-2024 | செவ்வாய் - பூங்காவனம் - மாலை 5:30 மணி ஸ்நபன அபிஷேகம், 7:00 மணி இரவு பூஜை தொடர்ந்து பூங்காவனத்திருவிழா நடைபெற்று அருட்பிரசாதம் வழங்கல். |
| 19-07-2024 | வெள்ளி 7:00 மணி இரவு பூஜையைத் தொடர்ந்து வைரவர் மடை, அருட்பிரசாதம் வழங்கல் |

குறிப்பு: திருவிழாக்காலங்களில் காவடி, கற்பூரச்சட்டி (வெளி வீதிக்கு மட்டும்), மற்றும் பால்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் தயவு செய்து ஆலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம். அத்துடன் அம்பிகைக்கான அபிஷேகப் பொருட்கள், பால், தயிர் போன்றன ஏற்றுக்கொள்ளப்படும்.

# வள்ளல்களும் தமிழரசியலும்

இலவசமாகக் கிடைப்பதைப் பெரும்பாலானவர்கள் கைவிட மாட்டார்கள். இது பெரும்பாலான எல்லாச் சமூகங்களிலும் காணப்படும் ஓரியல்பு. அதிலும் குறிப்பாக ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தில் கூட்டுக் காயங்களிலும் கூட்டு மன வடுக்களிலும் அழுந்திக் கிடக்கும் ஒரு சமூகத்தில், உதவிக்காகக் காத்திருப்பவர்களின் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். கடந்த 15 ஆண்டு கால ஈழத்தமிழ் அரசியலானது அவ்வாறு உதவிக்காக காத்திருப்பவர்களுக்கு பொருத்தமான நிவாரணத் திட்டங்களையும் கட்டமைப்புக்களையும் உருவாக்கத் தவறிவிட்டது.

2009இல் காணாமல் போன தனது இளம் கணவனுக்காக போராடிய இளம் மனைவி இப்பொழுது முதுமையின் வாசலை அடைந்து விட்டாள். அவளுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. அப்படித் தான் காயப்பட்டவர்கள் அவயங்களை இழந்தவர்கள், மிகக் குறிப்பாக முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள், கழுத்துக்குக் கீழ் இயங்க முடியாதவர்கள், இரு கண்களையும் இழந்தவர்கள், இரு கால்களையும் இழந்தவர்கள்…போன்றவர்களுக்கு உதவுவதற்கு ஒரு மையத்திலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட எத்தனை கட்டமைப்புகள் உண்டு? காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாக உள்ள பெண்களின் கண்ணீரை வைத்து அரசியல் செய்யும் ஒரு சமூகம், அப்பெண்கள் மத்தியில் காணப்படுகின்ற இளவயதினருக்குப் புதிய வாழ்வைக் கொடுக்கத் தவறிவிட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ள ஒரு சமூகத்தில் பிறரிடம் இருந்து கிடைக்கக் கூடிய உதவிக்காக காத்திருப்பவர்களின் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். தமிழ்ச்சமூகத்தில் பிறர் உதவியில் தங்கியிருக்கும் தொகையினரை கடந்த 15ஆண்டுகளாக அரசியல்வாதிகள், தொண்டு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உள்ள தனி நபர்கள், தன்னார்வ அமைப்புக்கள் இவை தவிர நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள வள்ளல்கள், கொடையாளிகள் போன்றவர்கள் ஏதோ ஒரு விதத்தில் அரவணைத்து வருகிறார்கள்.

மேற்சொன்ன ஒவ்வொரு தரப்பும் அவரவர் நோக்கு நிலையில் இருந்து தான் அந்த மக்கள் கூட்டத்தை அரவணைக்கிறார்கள். அதனால் தேவை நாடிகளாக இருப்பவர்களுக்கு ஏதோ ஒரு விகிதமளவு நிவாரணம் கிடைக்கிறது. உதவிகள் கிடைக்கின்றன. உளவளத் துணையும் கிடைக்கின்றது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொண்டு செய்பவர்கள் தானம் செய்பவர்கள் முதலாவதாக நல்லதைத் தான் செய்கிறார்கள். ஆனால் தொண்டும் தானமும் மட்டும் ஒரு சமூகத்தை அதன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழ வைக்க உதவாது.அந்த மக்களைக் கையேந்தி மக்களாக வைத்திருப்பதற்கும் அப்பால் அவர்களை வாழ்வில் பிடிப்பும் நம்பிக்கையும் கொண்டவர்களாக, விடா முயற்சி உள்ள உழைப்பாளர்களாக மாற்ற வேண்டும்.

அது தேசத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடு. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் ஒரு செயற்பாடு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தானமும் தொண்டும் கருணையின் பாற்பட்ட செயல்கள் மட்டுமல்ல. அவை தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளில் ஒரு பகுதி.அவை தேசியக் கடமைகள் காயத்தில், துக்கத்தில் இழப்பில் தனிமையில் விழுந்து கிடப்பவர்களுக்குக் கைகொடுப்பது அவர்களைத் தூக்கி நிறுத்துவது அவர்களின் காயங்களை ஆற்றுவது, போன்றன ஒப்பீட்டளவில் செட்டில்ட் ஆன தமிழ் மக்களின் தேசியக் கடமைகள்.

அதற்கு ஓர் அரசியல் தலைமைத்துவம் தான் முழுமையான பொருளில் வழி நடத்த முடியும். ஓரளவுக்குச் சமூகத் தலைமைத்துவமும் மதத் தலைமைத்துவமும் செயற்பாட்டு அமைப்புக்களும் செய்யலாம்.

ஆனால் அப்படிப்பட்ட செய்முறைகள் கடந்த 15 ஆண்டுகளாக மிகக்குறைந்த அளவில்தான் நடநதிருக்கின்றன. மிகக் குறைந்த தொகையினர்தான் அவ்வாறு வலுவுட்டப்பட்டிருக்கிறார்கள். பெருந்தொகையானவர்கள் தொடர்ந்தும் கையேந்திகளாகவும் நிவாரணங்களுக்காகக் காத்திருப்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட ஒரு சமூகப் பின்னணியை வள்ளல்களும் கொடையாளிகளும் தமக்கு வசதியாகக் கையாளப் பார்க்கிறார்கள்.



கடந்த வியாழக்கிழமை அப்படி ஒரு சம்பவம் நடந்தது. அன்று கொழும்புக்கான ஜநாவின் இணைப்பாளர், ஜநா அலுவலகம் ஒன்றில் குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகளைச் சந்திப்பதாக இருந்தார். ஆனால் அவருடைய பயணம் சிறிது நேரம் தாமதம் ஆகியது. ஏனென்றால் அவர் வரும் வழியில் நாவலர் வீதியில் ஒரு பல்பொருள் அங்காடியைச் சூழ உள்ள பிரதேசத்தில் அசாதாரணமாக போக்குவரத்து நெரிசல் காணப்பட்டது. அங்குள்ள ஒரு பல்பொருள் அங்காடி உரிமையாளரின் பெருமெடுப்பிலான தான நிகழ்வே அந்த நெரிசலுக்குக் காரணம். அங்கே போலீசாரும் படை வீரர்களும் காணப்பட்டார்கள். எனினும் அங்கு பெருகிய மக்களைக் கட்டுப்படுத்த யாராலும் முடியவில்லை. அதனால் ஜநாவின் பிரதிநிதி சிறிது கால தாமதமாக சந்திப்புக்கு வந்தார்.

மேற்சொன்ன பல்பொருள் அங்காடியின் முதலாளி ஏற்கனவே அதுபோன்ற தான நடவடிக்கைகளுக்காக மிகவும் பிரபல்யமானவர். உதவி தேவைப்படுகிறவர்களுக்கு அவர் காசை அள்ளி வீசுவார். அன்றைய தான நிகழ்வுக்கு வெளியிடங்களில் இருந்து குறிப்பாக தூர இடங்களில் இருந்து மக்கள் முதல்நாளே இரவு பயணம் செய்து அங்கு வந்திருந்தார்கள். வயோதிபர்கள்,நோயாளிகள்,குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் என்று பல வகைப்பட்டவர்களும் அங்கே இருந்தார்கள். அவர்களைக் கௌரவமான விதத்தில் ஒழுங்குபடுத்தி அதை ஒரு கௌரவமான தான நிகழ்வாகச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு இருந்திருந்தால், அன்றைக்கு அந்த நெரிசலைத் தவிர்த்து இருந்திருக்கலாம். அல்லது அது ஒரு கட்டுப்படுத்த முடியாத பெரும் விழாவாக வெளியில் தெரிவதை அந்த முதலாளி விரும்பினாரோ தெரியவில்லை.

கொடையாளிகள் அல்லது வள்ளல்கள் எல்லாச் சமூகங்களிலுமே போற்றப்படுகின்றார்கள். எல்லா மதங்களிலுமே அவர்களுக்கு உயர்வான இடம் உண்டு.குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் புராண நாயகனாகிய கர்ணன், முல்லைக் கொடிக்குத் தேரைக் கொடுத்த மன்னன் பாரி போன்றவர்கள் உதாரணங்களாகக் கூறப்படுவதுண்டு. நவீன வரலாற்றிலும் கோடீஸ்வரர்களும் உலகப் பெரு முதலாளிகளும் தாம் திரட்டிய செல்வத்தின் ஒரு பகுதியைத் தானம் செய்கிறார்கள். அல்லது தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கிறார்கள். அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழராகிய ராஜ் ராஜரத்தினம் அவ்வாறு கோடிக்கணக்கான ரூபாய்களை பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். தானம் செய்வதற்கு உழைக்க வேண்டும் உழைத்தால் தான், செல்வத்தைத் திரட்டினால் தான், தானமாகக் கொடுக்கலாம் என்ற பொருள்பட அவர் தன்னுடைய சமனற்ற நீதி என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

தொண்டு செய்வது நல்லது. வள்ளல்கள் போற்றுதற்குரியவர்கள். ஆனால் தொண்டர்களும் வள்ளல்களும் அரசியலில் இறங்கலாம் என்று சிந்திக்கும் ஒரு போக்கு எங்கிருந்து வருகிறது?

தமிழகத்தில் எம்ஜிஆர் விஜயகாந்த் போன்றவர்கள் வள்ளல்களாக போற்றப்படுகிறார்கள். அதனால் லட்சக்கணக்கான ஆதரவாளர்களை அவர்கள் சம்பாதித்தார்கள். ஈழத்தமிழர்கள் மத்தியில் அவ்வாறு வள்ளல்கள் அரசியலில் ஈடுபடும் ஒரு போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகிறது. வள்ளல்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று இக்கட்டுரை கூறவரவில்லை.

கடந்த 15 ஆண்டுகால தமிழ் அரசியல் போக்கெனப்படுவது வள்ளல்களுக்கும் கொடையாளிகளுக்கும் வசதியான ஒன்றுதான். கொடைகளின் மூலம் வள்ளல்கள் சமூகத்தில் இயல்பாகவே அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் பெற்று விடுகிறார்கள். அதை அவர்கள் அரசியலில் முதலீடு செய்வது இலகுவானது. ஏற்கனவே தமது தொழில்சார் திறமைகள் காரணமாக புகழடைந்த, செல்வந்தர்களாகிய சிலர் தமிழரசியலில் இறங்கி விட்டார்கள். செல்வந்தர்களாகவும் பிரபல்யங்களாகவும் இருக்கும் பலர் இறங்கத் துடிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஓர் அரசியல் சூழலில் வள்ளல்கள் இலகுவாக அரசியலில் நுழையலாம். இது அரசியல்வாதியாக இருப்பதற்குரிய தகமை என்ன என்ற தமிழ்ச் சமூகத்தின் அளவுகோல்களைக் காட்டுகிறது என்று எடுத்துக் கொள்ளலாமா?

அது மட்டுமல்ல தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலை முன்னெடுக்கத் தவறிய ஒரு வெற்றிடத்தில் தான் வள்ளல்கள் ஒரு தேசியக் கடமையை தனிப்பட்ட தானமாகவும் கருணையாகவும் கருதி அதன் ஊடாக அரசியலில் பிரவேசிக்க முயற்சிக்கிறார்களா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கூட்டு மனவடுகளோடும் ஆறாத கூட்டுக்காயங்களோடும், அவநம்பிக்கைகளோடும் காணப்படும் ஒரு சமூகத்தை பண்புரு மாற்றத்தின் ஊடாகக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு 2009க்குப் பின் வந்த எல்லாத் தலைவர்களுக்கும் இருந்தது. ஆனால் அது பொருத்தமான விதத்தில் முன்னெடுக்கப்படவில்லை. அதன் விளைவாக விழுந்த வெற்றிடத்தில் தான் வள்ளல்கள் தலைவர்களாக வர முயற்சிக்கிறார்கள்.

தமிழ்ச் சமூகத்துக்கு இப்பொழுது தேவையாக இருப்பது 15 ஆண்டுகளின் பின்னரும் கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல ஒரு கூட்டு அரசியல் செயல்பாடு தான். ஆனால் அவ்வாறு கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல அரசியலை முன்னெடுக்கவல்ல ஆளுமை மிகுந்த தலைவர்கள் எத்தனை பேர் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு?

மக்களுக்கு நிவாரணம் வேண்டும். உதவிகள் வேண்டும். நிதிவளம் மிக்க புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் காசை என்ன செய்வது என்று தெரியாமல் கோவில்களில் கொண்டு போய்க் கொட்டுகின்றது.அந்தக் காசைப் பயன் பெறுமதி மிக்கதாக மாற்றலாம். அதற்கு 2009க்குப் பின்னரான தமிழ் அரசியலைக் குறித்த பொருத்தமான அரசியல் தரிசனமும் பொருளாதார தரிசனமும் நிவாரண தரிசனமும் இருக்க வேண்டும். வள்ளல்களுக்கு அவ்வாறான தரிசனம் இருக்குமாக இருந்தால் பிரச்சினை இல்லை. (22ம் பக்கம் பார்க்க)

we are hiring!
JOIN OUR TEAM
வீட்டிலிருந்தவாறே பணிப்புரிவதற்கு
ஒரு அரிய வாய்ப்பு
முழு நேர மற்றும் பகுதி நேர
வேலைவாய்ப்புக்கள் உள்ளது
இணையம், மடிக்கணினி மற்றும்
கைத்தொலைபேசி வைத்திருக்கும்
அனுபவமுள்ளவர்கள், அனுபவமற்றர்கள்
மற்றும் மாணவர்களும்
விண்ணப்பிக்கலாம்.
Work From Home
Full Time or Part Time
Students Are Welcome
Must Have an Internet ,
Laptop & Mobile Phone
Email Your CV To:
info@friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
GTA Square - 5215 Finch Ave. E, Unit 257

# இலங்கை மீது குவியும் கவனம்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிவதற்குள், இந்தியா சில தீர்க்கமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிட்டு இருப்பதாக தெரிகிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக, புதுடில்லிக்கு பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேசியிருந்தார். இந்தச் சந்திப்பின் போது சில முக்கியமான தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

முதலாவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள விருக்கிறார். இரண்டாவது, அதற்கு முன்னதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். மூன்றாவது, திருகோணமலையை மையப்படுத்திய கைத்தொழில் வலயத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் விரைவுபடுத்தப் படவுள்ளது. நான்காவது, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட இந்தியாவுடன் தொடர்புடைய முதலீட்டு திட்டங்களை விரைவாக செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த நான்கு பிரதான விடயங்களும், அடுத்த ஓரிரு மாதங்களுக்குள் அதாவது ஜனாதிபதி தேர்தல் பரபரப்பு தொடங்குவதற்கு முன்னர், நிறைவேற்றப்படுவதை இந்தியா எதிர் பார்த்திருக்கிறது. இந்திய பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வின் வெற்றி ஏற்கனவே உறுதியாக நம்பப்பட்ட ஒன்று. ஆனால் எதிர் பார்க்கப்பட்டதை விட குறைந்தளவு வெற்றியே கிடைத்திருக்கிறது.

எவ்வாறாயினும் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரும் என உறுதியாக நம்பப்பட்ட சூழலில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார் என்பது முன்கூட்டியே உறுதி செய்யப்பட்டிருந்தது. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு, பிரதமர் மோடி தனது பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்குமாறு அழைப்பு விடுவதற்கு முன்னரே, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் புதுடில்லி பயணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது மோடி மீண்டும் பிரதமர் ஆவார், பா.ஜ.க. மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்ற நம்பிக்கைகளுக்கு அப்பால், இந்தப் பயணம் அவசியமானதாக உணரப்பட்டிருந்தது.

அதனால் தான், யார் ஆட்சிக்கு வருவார் என்று தெரிந்து கொள்ள முன்னரே, பிரதமர் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற் கொண்டிருந்தார். அவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தனிப்பட்ட ரீதியான சந்திப்புக்களை நடத்தவில்லை. ஏனென்றால் பிரதமர் மோடி தேர்தலில் வெற்றி பெற்று, பதவியேற்புக்கான சம்பிரதாய ரீதியான ஏற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. பதவியேற்பு நிகழ்வு நள்ளிரவுக்கு முன்னர், நிறைவடைந்த போதும், மறுநாள், புதிய அமைச்சரவையை கூட்டி யார் யாருக்கு எந்த துறைகள், அமைச்சுகள் என்பதை முடிவு செய்ய வேண்டிய கட்டாயம் அவருக்கு இருந்தது.

அதனால், ரணில் விக்கிரமசிங்கவுடன் தனிப்பட்ட முறையிலான பேச்சுக்களை இந்தியப் பிரதமர் நடத்தவில்லை. ஆனால் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் விரிவான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருக்கிறது. அப்போது தான், இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகஸ்ட் மாதத்துக்குள் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ள இருக்கும் தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு முதல் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் பயணம் இடம் பெற உள்ளது. அவர் இந்த பயணத்தின் போது நரேந்திர மோடியின் பயணத்திற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயவுள்ளார். அதைவிட அவர் திருகோணமலையில் கைத்தொழில் வலயம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை விரைவாக செயற்படுத்துவது குறித்தும், ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்டு, தடைப்பட்டு போயிருக்கும் இந்தியாவின் முதலீட்டு திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான நோக்கத்துடனும் தான் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவிருக்கிறார். பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் இலங்கையில் இந்தியா அதிகளவு முதலீடுகளை செய்வதற்கு முன் வந்தது. ஆனாலும் அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் இல்லை. உதாரணத்துக்கு மன்னார் மற்றும் பூநகரியில் அதானி குழுமத்தின் முதலீட்டில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் திட்டம் இதுவரையில் செயற்பாட்டு நிலைக்கு வரவில்லை. இதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருக்கின்றன. பூர்வாங்க வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனாலும் சில சட்ட ரீதியான தடைகளும், நடைமுறைச் சிக்கல்களும் இந்த திட்டங்களை தொடங்குவதற்கு தடையாக இருக்கின்றன.

மன்னாரில் காற்றாலை அமைப்பதற்கு எதிராக அண்மையில் உயர்நீதி மன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னரும் மற்றொரு வழக்கும் உள்ளது. இது போன்ற சிக்கல்கள், இந்தியா எதிர்பார்க்கும் வேகத்துடன், முதலீட்டு திட்டங்களை செயற்படுத்துவதற்கு தடையாக உள்ளது.

ஒரு பக்கத்தில் சீனா முதலீடுகளை வலுப்படுத்தி வருகிறது. அம்பாந்தோட்டையில் சீனாவின் சினோபெக் நிறுவனம் பாரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் செயற்படுத்தப் பட்டால், இலங்கையில் அது மிகப்பெரிய முதலீடாக இருக்கும். அது தவிர, இலங்கையின் எரிபொருள் சந்தையில், இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு கடும் போட்டியையும் உருவாக்கும்.

சீனக்குடாவில் இந்தியா மிகப் பெரிய எண்ணெய் களஞ்சிய வசதிகளைக் கொண்டிருந்தாலும், அதன் முக்கியத்துவத்தை இது இழக்கச் செய்துவிடும். அதனால்தான் இந்தியா தனது திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தப் போகிறது.

அடுத்த முறையும் ஆட்சியில் அமர முடியும் என்று பா.ஜ.க.வினால் நம்ப முடியாத நிலையே இப்போது காணப்படுகிறது. கடந்த தேர்தலில் தனித்து 303 ஆசனங்களைக் கைப்பற்றிய பா.ஜ.க.வுக்கு இந்த முறை 240 ஆசனங்கள் தான் கிடைத்தன. அடுத்த முறை இன்னும் சரிவு ஏற்படலாம். அதற்குள் இலங்கையில் பா.ஜ.க. அரசு தொடங்கிய திட்டங்கள் நிறைவேற்றப்படுவது முக்கியம்.


பா.ஜ.க.வுக்கு குறிப்பாக, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நெருக்கமான கௌதம் அதானியின், அதானி குழுமம் தான் இலங்கையில் பேரளவு முதலீடுகளை செய்வதற்கு முன்வந்திருக்கிறது. தேர்தலுக்குப் பின்னரான கருத்துக் கணிப்புக்கு மாறாக, தேர்தல் முடிவுகள் வெளியான போது, ஒரே நாளில் இந்திய பங்குச் சந்தையில் 31 இலட்சம் கோடி ரூபாயை முதலீட்டாளர்கள் இழந்தனர்.

பங்குச் சந்தை வீழ்ச்சியால் அதிகம் பாதிக்கப்பட்டது அதானி தான். அதானி என்டர்பிரைசஸ் மற்றும் அதானி போர்ட்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் மாத்திரம் 40 சதவீத இழப்பு ஏற்பட்டது. இவ்வாறான சூழலில் அதானி குழுமத்தின் முதலீட்டை பாதுகாப்பது, இந்திய அரசுக்கு முக்கியமானது. இந்திய பிரதமர் மோடியின் ஆகஸ்ட் மாத வருகைக்கு முன்னர் இலங்கையில் இந்தியாவின் திட்டங்களுக்கு உள்ள தடங்கல்களை நீக்கி, அவரைக் கொண்டு வடக்கில் காற்றாலை திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நோக்கம் புதுடில்லிக்கு இருப்பதாகவே தெரிகிறது. அதேவேளை திருகோணமலையில் கைத் தொழில் வலயத்தை உருவாக்கும் முயற்சிகளையும் இந்தியா தொடங்க உள்ளது. இந்த கைத்தொழில் வலயத்தில் பிற நாடுகளின் முதலீடுகளையும் எதிர்பார்ப்பதாக கூறியிருக்கிறார் ஜெய்சங்கர். திருகோணமலையைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானது. அங்கு இயற்கை துறைமுகம் இருக்கிறது. இந்தியாவின் ஐ.ஓ.சி. நிறுவனத்தினால் பெறப்பட்ட எண்ணெய்க் குத்தகைக்கு தாங்கிகள் இருக்கின்றன.

புல்மோட்டையில் இல்மனைட் கனிய மணல் இருக்கிறது. அணுமின் நிலையத்தை அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள இடங்களில் ஒன்றாகவும் புல்மோட்டை இடம் பிடித்திருக்கிறது. இவ்வாறான இடத்தில் கைத்தொழில் வலயம் ஒன்றை நிறுவுவதன் மூலம் இந்தியா தனது செல்வாக்கை மேலும் விரிவுபடுத்த முனைகிறது. இதற்கான சூழலை ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் உருவாக்கிக் கொள்ள புதுடில்லி விரும்புகிறது. ஏனென்றால் அடுத்து வரப் போகும் அரசாங்கம் இந்தியா எதிர் பார்க்கின்ற அளவுக்கு நெகிழ்வுடன் நடந்து கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது. இந்தியாவின் முதலீடு மற்றும் செல்வாக்கிற்கு இடையூறை ஏற்படுத்தக் கூடிய ஆட்சி ஒன்று அமைவதற்கான வாய்ப்புகளையும் நிராகரிக்க முடியாது. எனவே இந்தியா விரைவாக தனது நலன்களை உறுதிப்படுத்த முற்படுவதில் ஆச்சரியம் இல்லை..



சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு எங்கிருந்து வந்தது?

தமிழ் பொதுவேட்பாளர் நிலைப்பாடு தொடர்பான உரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. ஆனால் இது தொடர்பில் சாதாரண மக்கள் மத்தியில் இன்னும் நெருப்பு பற்றவில்லை. கருத்து மக்களை பற்றிக் கொண்டால் அது ஒரு சக்தியாக உருவெடுக்கும் என்று ஒரு கூற்றுண்டு.

றார். ஆனால் சுமந்திரனின் கடந்த கால அரசியல் அணுகுமுறைகளை எடுத்து நோக்கினால், எதிலும் அவர் வெற்றி பெறவில்லை. கடந்த 15 வருடங்களாக சுமந்திரனின் அரசியல் தீர்மானங்கள் அனைத்தும் புஸ்வாணமாகியிருப்ப தற்கு மக்கள் சாட்சியாக இருக்கின்றனர்.

ஒரு முயற்சி தான், இந்த தமிழ் பொது வேட்பாளர். இந்த முயற்சி எங்கிருந்து வந்தது? இதன் பின்னணி என்ன? இதற்குப் பின்னால் யார் இருக்கின்றனர்?

கடந்த 15 வருடகால அரசியல் அணுகு முறைத் தோல்வியின் விளைவிலிருந்து தான் இவ்வாறானதொரு முயற்சி துளிர்

செய்வதற்காக உழைக்கும் அரசியல் சமூகமாக களத்தில் இறங்கியிருக் கின்றனர். அவ்வாறானவர்கள் மத்தியில் அரசியலை கையாள்வது தொடர் பில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்க லாம். ஆனால் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே தீர்மானித்து, சுய கௌரவத் துடன் வாழ வேண்டும், அதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதில் எவருக்குமிடை யில் மாறுபாடுகள் இல்லை.

இந்த முயற்சியைத் தான் சுமந்திரன் கோமாளிக் கூத்து என்கின்றார். ஒரு அரசியல் சமூகத்தின் குரல், சுமந்திரன் போன்றவர்களுக்கு கோமாளிக் கூத்தாக தெரிவதும் கூட பிழையல்ல.

ஏனெனில் கடந்த 15 வருடங்களாக சம்பந்தனும் சுமந்திரனும் மேற்கொண்ட அரசியல் கோமாளித் தனங்கள் மீது



கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஏற்பட்ட வெறுப்பின் வெளிப்பாடு தான் பலரை, தமிழ் பொது வேட்பாளர் என் னும் நிலைப்பாட்டை நோக்கி ஒன்று படுத்தியிருக்கின்றது. சுமந்திரன் போன்ற வர்களின் அதிகார மற்றும் பண பலத் திற்கு முன்னால், அதேபோன்று, சைக் கிள் அணியினரின் பணபலம் மற்றும் சதிப் பிரசாரங்களினால் ஒரு வேளை

அதற்கு ஏற்றவாறு காரியங்கள் நிகழும் போது மக்கள் நிச்சயம் தமிழ் பொது வேட்பாளரின் பின்னால் அணி திரள்வார் கள். மக்கள் அவ்வாறு அணி திரள் வார்கள் என்பதில் ஒரு தரப்பினர் மிக வும் தெளிவாக இருக்கின்றனர். அவர் கள் தான் இதனை எதிர்ப்பவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறு எதிர்ப்பவர்கள் இரண்டு அணியினராக செயற்பட்டு வருகின்றனர்.

ஒரு அணியினர் பகிஷ்கரிப்பு என்னும் சுலோகத்துடன் செயற்பட்டு வருகின்ற னர். இன்னொரு அணியினர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஒரு கோமாளிக்கூத்து, ஒரு விசப்பரீட்சை என்னும் சொற்களோடு ஆவேசப்படு கின்றனர்.

அண்மையில் சுமந்திரன் ஆவேசப்பட்டி ருந்ததை இந்த பின்புலத்தில் தான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பின்னணியில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை வேறு பட்ட காரணங்களைக் கூறி எதிர்க்கும் இரண்டு தரப்பினரும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாவர்.

இரண்டு தரப்பினதும் இலக்கு ஒன்று தான். அதாவது, தமிழ் பொது வேட் பாளர் நிறுத்தப்படுவதை தடுப்பது, ஒரு வேளை நிறுத்தப்பட்டால், அவருக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைப் பதை தடுப்பது. இதனை எதிர்த்து நாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும், இலங்கை தமிழரசுக் கட்சி செய்யும் என்று சுமந்திரன் ஆவேசப்பட்டதை, இந்த அடிப்படையில் தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை தமிழரசுக் கட்சி இதுவரை யில் அதன் உத்தியோகபூர்வ முடிவை அறிவிக்கவில்லை. ஆனால் சுமந்திரனோ, தமிழரசுக் கட்சி, தமிழ் பொது வேட் பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதில்லை என்று முடிவெடுத்துள்ளதாக கூறுகின் றார். ஆனால் தற்போது, மாவை சேனாதி ராசா அவ்வாறான முடிவு எதனையும் கட்சி இன்னும் எடுக்கவில்லை என்று அறிவித்திருக்கின்றார். இதில் யார் கோமாளிக் கூத்தாடுவது, சுமந்திரனா அல்லது மாவை சேனாதிராசாவா? தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராசாதான் இருக்கின்றார் என்றே நம்பப்படுகின்றது.

உண்மையில் சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்க வேண்டியதில்லை. அதற்கு மாறாக அனைவரும் ஆதரித்தால் நானும் ஆதரிக்கின்றேன் என்று அடக்கமாக பதிலளித்திருக்கலாம். ஆனால் சுமந்தி ரனோ வழக்கம் போல் அனைத்தையும் தீர்மானிப்பவன் நான் தான், எனது கடைக்கண் பார்வையின்றி இங்கு எது வும் அசையாது, அசையக் கூடாது, அவ்வாறு நடக்கவும் விடமாட்டேன் என்பது போன்றே நடந்து கொள்கின்

இந்தக்காலத்தில் எவரது கருத்துகளை யும் சுமந்திரன் பொருட்படுத்தியதில்லை. அனைத்தும் தனக்குத் தெரியுமென்னும் இறுமாப்புடன்தான் நடந்துகொண்டார். அவரது இறுமாப்பிற்கு என்ன நடந்தது என்பதை மக்கள் அறிவர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலிருந்து தான் தமிழ் பொது வேட்பாளர் நிலைப் பாடு கூர்மையடைந்திருக்கின்றது. 2010 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு முன் வைக்கப்பட்டது. இந்த விடயத்தை மூத்த அரசறிவியல் அறிஞர் மு.திருநாவுக்கரசு வலிபுறுத்தி யிருந்தார். உண்மையில் அன்றைய காலம், இந்த விடயத்தை கையிலெடுப்ப தற்கு மிகவும் சரியானதொரு தருண மாகவே இருந்தது.

யுத்தத் தோல்வி என்பது, அரசியல் நிலைப்பாட்டின் முடிவல்ல என்பதை ஆணித்தரமாக கூறியிருக்க முடியும். ஒரு வேளை அதனை அப்போதே கூறி யிருந்தால், அன்றைய சூழலில் உடனடி யாகவே தமிழ் தேசிய அரசியல் ஒரு ஜனநாயக வடிவத்திற்கு மாறியிருக்கும். தேவையற்ற பிளவுகளும் ஏற்பட்டிரு க்காது. தமிழ் மக்களும் அரசியல் ரீதியில் சிதறியிருக்க மாட்டார்கள். ஆனால் மு. திருநாவுக்கரசுவின் அரசி யல் தீர்க்க தரிசனத்தை உணர்ந்து செயற்படுமளவிற்கு சம்பந்தனுக்கு ஆற் றல் இருந்திருக்கவில்லை. சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் வெறுமனே சட்டத்தின் வழியாக அரசியலை பார்ப்ப வர்கள். பிராந்திய, சர்வதேச அரசியல் மாற்றங்களின் ஊடாக அரசியலை பார்க்கும் ஆற்றலை, அவர்களிடமிரு ந்து எதிர்பார்க்கவும் முடியாது தான்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு என்பது ஒரு கோமாளிக் கூத்தல்ல. அதே வேளை, இது ஒரு தவறான விட யமும் அல்ல. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு என்பது இன்றைய அரசி யல் சூழலை கையாளும் ஒரு அரசியல் தந்திரோபாயமாகும். வெறும் வாக்குறுதி களால் காலத்தை கழிப்பதால், தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையை காணா மல் போகச் செய்ய முடியாது. அரசிய லில் உறுதி கொண்டு பயணிப்போரை வேண்டுமானால் காணமால் போகச் செய்யலாம். ஆனால் ஒரு இனத்தின் அரசியல் வேட்கையை எந்த அதிகார சக்தியாலும் காவு கொள்ள முடியாது என்னும் செய்தியை சொல்வதற்கான

விட்டது. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் அணியினரின் தவறான, தூரநோக்கற்ற, அரசியலை சூழ்நிலையில் நிறுத்துப் பார்க்கத் தெரியாத, அணுகுமுறைகளே இல்லாறானதொரு கோரிக்கையின் பின்னணியாகும்.

கடந்த 15 வருடகாலமாக, அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக எழுதியும் பேசியும் ஒன்றுகூடியும் வந் தவர்களே இதற்குப் பின்னால் இருக் கின்றனர். அவர்களே தற்போது, தமிழ் பொது வேட்பாளரை வெற்றி பெறச்

இந்த முயற்சி தோற்கடிக்கப்படலாம். ஆனால் கருத்து மக்களை பற்றிக் கொண்டால் அது ஒரு சக்தியாக உரு வெடுக்கும் என்பதில் நம்பிக்கை வைத் திருப்பவர்கள் பதற்றமடைய மாட்டார் கள்.



# எண்பத்து மூன்றும் ஒன்றும்:- அவனின்றி ஓரணுவும் அசையாதா?

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை தமிழ்ஈழம் சார்பாக சிறிலங்கா ஜனாதிபதி தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற முடிவுக்கு 83 குடிசார் அமைப்புக்களும்(?) சமூகச் செயற்பாட்டாளர்களும் (?) உடன் பட்டிருக்கிறார்கள். இந்த நீண்ட பட்டியல் நீண்ட கால இழுபறிக்கு பின்னர் ஊடகங்களில் வெளியாகி இருக்கிறது. இது தமிழ்த் தேசிய பொதுவேட்பாளர் அரசியலின் ஒரு பக்கம்.

இதற்கு எதிர்ப் பக்கம் ஒன்றும் இருக்கிறது. அது தான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னனி என்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் எக்ஸ். ரி.என்.ஏ யின் பிரதானி தமிழரசுக்கட்சி. இவை பொதுவேட்பாளர் ஆலோசனையை முடிவு எடுக்கவேண்டி உள்ளது. அதனால் தான் தமிழரசுக்கட்சி இணங்கா விட்டால் பொதுவேட்பாளர் யோசனை வெற்றியளிக்காது என்று அடிக்கடி சொல்லி ரெலோ அடிசறுக்கிறது. ஆகவே தான் ஒட்டு மொத்த 83 பலத்தையும் விஞ்சி நிற்கின்ற ஒரே பலமாக தமிழரசுக் கட்சியும் -சுமந்திரனும் உள்ளனர்.

இங்கு 83 பெரியதல்ல 1 தான் பெரியது. ஒப்பீட்டளவில் சக்திமிக்கது, பலமானது, தமிழ்த்தேசிய அரசியலின் நகர்வு திசையை நிர்ணயிக்கக்கூடியது. இன்னும் சொன்னால் கட்சியின் ஒரு முக்கிய ஒரே உறுப்பினராக சுமந்திரனே இவற்றை நிர்ணயிக்கிறார். இது கட்சியின் ஜனநாயகம் குறித்து

வேறுபட்ட காரணங்களுக்காக எதிர்ப்பவை. மூத்தது பகிஷ்கரிப்பைக் கோருகிறது. இளையது வாக்களிப்பை கோருகிறது.

இன்னொரு அணியும் இருக்கிறது. அது எக்ஸ்.ரி.என்.ஏ.யின் போடுகாய்களாக இருந்து வெளியேறி இருக்கின்ற கட்சிகளின் அணி.

இவர்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு என்று சொல்லும் அதே நேரம் தமிழரசுக்கட்சியின் இணக்கம் இன்றி பொதுவேட்பாளர் சாத்தியம் இல்லை என்றும் சொல்பவர்கள்.

ஆக, தமிழ்க் காங்கிரஸ்க்கு ஒரு நிலைப்பாடு இருக்கிறது, பகிஷ்கரிப்பு. தமிழரசில் ஒரு நிலைப்பாடு தெரிகிறது, வாக்களிப்பு. குத்துவிளக்கு நிலைப்பாடு இரண்டுக்கும் இடையே இரண்டும் கெட்டான் நிலை. தனித்து அரசியல் முடிவுகளை எடுக்க முடியாத பலவீனம். கூட்டத்தில் கோவிந்தா...! கூட்டுப் புக்கையில் பங்கு....!

இந்த நிலையில் நூறு தமிழ்த் தேசிய கட்சிகள் இருந்தாலும் பொது வேட்பாளரை பகிரங்கமாக எதிர்த்து நிற்கின்ற ஒரு கட்சியாக தமிழரசுக் கட்சியே கொடுக்குக்கட்டி நிற்கிறது. இதை பொதுவேட்பாளருக்கு எதிராக தமிழரசுக்கட்சி பிரச்சாரம் செய்யும் என்ற சுமந்திரனின் வேதவாக்கு உறுதிப்படுத்துகிறது. இந்த அறிவிப்பு கூட 83 குடிசார் பெயர் பட்டியலை நோக்கிவிடப்பட்ட சவால் மட்டும் அல்ல சைக்கிளையும், குத்துவிளக்கையும் நோக்கி விடப்பட்ட சவால். குத்து விளக்குகாரர்களுக்கு இருக்கின்ற தேர்வு சுமந்திரனை ஆமோதிப்பதா? எதிர்ப்பதா என்பது தான். 83 அமைப்புக்களை எதிர்த்து ஒரு கட்சி களத்தில் நிற்கிறது அதனால் 83: 01 என்று கூற வேண்டியுள்ளது.

சரியோ, தவறோ தமிழ்க் காங்கிரஸ் தலைமை திட்டவட்டமாகக் பகிஷ்கரிப்பு முடிவை அறிவித்து விட்டது. தமிழரசுக்கட்சியின் நாடித் துடிப்பு தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதாகவே அமையும் என்பது படிப்படியாக உறுதியாகிறது. ஆனால் இது தொடர்பாக ஒரு திட்டவட்டமான முடிவை எடுக்க முடியாமல் ரெலோவும், புளட்டும், பங்காளிகளும் திண்டாடுகின்றனர். இதன் தலைவர்களுக்கு முடிவு எடுக்கும் துணிச்சல், தலைமைத்துவ பண்பு இல்லை என்றால் இவர்களுக்காக முடிவு எடுப்பது யார்? என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கேள்விக்கான பதில் மிகவும் இலகுவானது. பொது வேட்பாளர் விடயத்தில் வீட்டுக்காக மட்டுமல்ல குத்துவிளக்குக்காகவும் சுமந்திரனே ஒரு கேள்வியை எழுப்பலாம். ஆனால் அந்த கேள்விக்கும் தனது முடிவை கட்சியின் முடிவாக ஜனநாயகப்படுத்துகின்ற வல்லமையும் சுமந்திரனால் முடியாத ஒன்றல்ல. 2010 முதல் தமிழரசுக் கட்சியின் அரசியல் தீர்மானங்களை எடுப்பதில் சுமந்திரனின் பங்கு குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல.

83 பட்டியல் நீளம். ஆனால் பின்னால் உள்ள அரசியல் பலம், மக்கள் ஆதரவு, அங்கீகாரம் குறைவு. பட்டியலே இல்லை ஒன்றே ஒன்று. ஒன்றுக்கு மேற் பட்டால்தான் பட்டியல். ஆனால் ஒப்பீட்டளவில் பின்னால் உள்ள கட்சி பலம், மக்கள் ஆதரவு, அங்கிகாரம் அதிகம். இதை வடக்கில் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியநிலை. இதைத்தான் சுமந்திரன் அண்மையில் யாழ்ப்பாணத்தில் 83க்கும் முகத்தில் அறைந்தாற் போல் சொல்லியிருக்கிறார்.

குடிசார் அமைப்புக்கள் ஆலோசனை சொல்லலாமே அன்றி முடிவு எடுக்க முடியாது. அரசியல் முடிவுகளை எடுப்பதற்கான அதிகாரம், அங்கீகாரம் அவர்களுக்கு இல்லை. அதை மக்கள் குடிசார் அமைப்புக்களுக்கு வழங்கவில்லை சுமந்திரன் சொன்னதில் என்ன தப்பு இருக்கிறது? கேட்க வேண்டிய கேள்வி தான்!

சுமந்திரன் எம்.பி.க்கு தெரியும் இவர்கள் எல்லாம் இறுதியில் தனக்கு பின்னால் வருவார்கள் என்றும், வந்தவர்கள் என்றும். நல்லாட்சியில் சுமந்திரன் எடுத்த தீர்மானங்களுக்கு பின்னால் போனவர்கள் இவர்கள். ஜனாதிபதி தேர்தலில் சஜீத் பிரேமதாசவை ஆதரித்தது, தளஸ் அழகப்பெருமாவை ஆதரித்தது, இறுதியில் தமிழரசுக்கட்சியின் தலைவர் தேர்வை செல்லுபடியற்றதாக்கியது போன்ற அனைத்து முடிவுகளுக்கும் பின்னால் சுமந்திரனே இருந்தார். இப்போது வெள்ளம் தலைக்கு மேலால் ஓடுகிறது.

வருகிறவர்கள், போகிறவர்கள் எல்லாம் பத்துப்பேர் கூடி ஒரு அமைப்பைக் கட்டி, ஆளுக்கோர் பதவியைப் பங்கிட்டுக் கொண்டு, பதவிக்காக ஒன்றுக்கு பத்து அமைப்புக்களையும் உருவாக்கிக் கொண்டு , கடிதத்தலைப்பு, தபால் பெட்டி அமைப்புக்களாக செயற்படும் நிலையில், குழுக்களும், தனிநபர் செயற்பாட்டாளர்களும் மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்க முடியுமா? அதற்கான சட்டரீதியான உரிமையும் அங்கீகாரம் அவர்களுக்கு இருக்கிறதா? இந்த கேள்வியை தமிழ்த் தேசிய அரசியலில் 2009க்கு பின்னர் எழுப்பியிருக்கிறார் யாழ்.எம்.பி. சுமந்திரன்.

தமிழ்த்தேசிய அரசியலில் இது புது விடயம் அல்ல. பொது அமைப்புகள் எதுவும் கட்சிகளை கட்டுப்படுத்திய வரலாறு கிடையாது. போர்க்காலத்தில் ஆயர்கள் கூட புலிகளை வழிக்கு கொண்டு வர முடியவில்லை. 2009க்கு பின்னர் எத்தனையோ அமைப்புக்கள் அமைக்கப்பட்டன. இவை எதுவுமே கட்சிகளின் போக்கில், செயற்பாட்டில், தலைமையில் எந்தமாற்றத்தையும் செய்யமுடியவில்லை. இந்த 83 உம் இதற்கு விலக்கல்ல. விடுதலைப் புலிகளின் காலத்திலும் இதே நிலை தான். ஒரு வித்தியாசம் அன்று புலிகளின் தாளத்திற்கு வாயையும்,



கண்களையும், காதுகளையும் பொத்திக் கொண்டு ஊமை நடனம் ஆடியவர்கள் இந்த அமைப்புகள். இன்று தங்களின் தாளத்திற்கு கட்சிகளை ஆடச் சொல்லி கேட்கிறார்கள்.

இந்த அமைப்புக்கள் 2009 க்கு முன்னர் என்ன செய்தவை? இப்போது தான் இவர்களுக்கு வாய்த்திருக்கிறது.

தமிழ் பொது வேட்பாளரா? அது தான் நடக்காது என்கிறார் யாழ்.எம்.பி. சுமந்திரன். இனி என்ன? அவருக்கு தென்னிலங்கையில் ஒரு வேட்பாளர் கிடைக்காமலா போகும். அவரும் பொதுவேட்பாளர் தானே.

இப்போதுள்ள கேள்வி? சுமந்திரனை எதிர்த்து தமிழரசுகட்சியை எதிர்த்து தமிழரசு ஆதரிக்கவுள்ள தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளரை எதிர்த்து தமிழ்பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக்கட்சியின் முடிவுகளை நிராகரிக்குமாறு தமிழ் மக்களை கோரும் துணிவு இந்த 83 இல் எத்தனைக்கு உண்டு? இரண்டும் கெட்டான் நிலையில் உள்ள குத்துவிளக்கு பூனைக்கு மணிகட்ட தயாரா?

ஆக, எல்லாம் அவன் செயல்....!அவனின்றி ஓரணுவும் அசையாது....!

இதுதமிழ்த்தேசிய அரசியல் வறுமை... ஆனால் இதுதான் ஜதார்த்தம்!

**- அழகு குணசீலன்**



# நிகழ வேண்டிய வழி

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிந்து 15 ஆண்டுகளாகி விட்டது. அங்கே இப்போது மக்கள் அமைதியாக வாழ்கிறார்கள் அல்லது அமைதியாக வாழக் கூடியதாக இருக்கும் என்ற எண்ணமே பொதுவாக உலகப் பரப்பில் உண்டு.

யுத்தம் முடிந்தது உண்மை தான். ஆனால், யுத்தத்திற்குக் காரணமான இன முரணும் இனப்பிரச்சினையும் முடிவுக்கு வரவில்லை. அது இன்னும் கொதி நிலையிலேயே உள்ளது. அதை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது அரசு. ஏனென்றால், இனவாதத்தில் தான் அரசுக் கட்டமைப்பே நிறுவப்பட்டுள்ளது.

இரண்டு மொழிகளைப் பேசும் நான்கு இன மக்களைக் கொண்ட சின்னஞ்சிறிய நாட்டில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்திருக்கிறது என்றால் இதை எப்படி விளங்கிக் கொள்வது? நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து நிற்பதும் லட்சத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்ததும் பல்லாயிரம்பேர் உடல் உறுப்புகளை இழந்ததும் ஏனென்று இன்னும் புரிந்து கொள்ளப்படவில்லை. உலகமெங்கும் கையேந்திக் கடன் கேட்டுக் கொண்டிருக்கிறது இலங்கை. வேறு வழியில்லாமல் நாட்டின் வளங்களும் பிறருக்கு விற்கப்படுகின்றன. ஆனாலும் இனவாதத்தைக் கைவிடுவதற்கு யாரும் தயாரில்லை.

பழைய பிரச்சினைகளோடு, புதிதாகப் பல பிரச்சினைகளை அரசாங்கம் உருவாக்கிக் கொண்டேயிருக்கிறது.

தமிழ்பேசும் மக்கள் அதிகமாக வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மந்தைகளின் மேய்ச்சற்தரை தொடக்கம், பௌத்த அடையாளங்கள் என்ற பேரில் நிலங்களையெல்லாம் அபகரிக்கிறது. (இலங்கையில் சிங்களமும் பௌத்தமும் ஒடுக்குமுறைக்கான ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது). மாறாக யுத்தத்திற் கொல்லப்பட்டோருக்கான இழப்பீடோ, நிவாரணமோ, வழங்கப்படவில்லை. காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் பிரச்சினைக்கு முடிவில்லை.

இறுதி யுத்தத்தில் சரணடைந்த போராளிகளைப் பற்றிய எந்தச் சேதிகளும் பதிலும் இல்லை. யுத்தத்தின் போது உடல் உறுப்புகளை இழந்த பல்லாயிரம் பேர் உள்ளனர். அவர்களுக்கான உதவித்திட்டங்கள் எதுவும் செயற்படுத்தப்படவில்லை. பெற்றோரை இழந்த குழந்தைகள் முப்பது ஆயிரத்துக்கு மேலுண்டு. அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளில்லை. யுத்தத்தில் அழிவடைந்த பிரதேசங்களில் புதிய தொழில் முயற்சிகள் உருவாக்கப்படவில்லை. ஏன் நாட்டிலேயே தொழிற்சாலைகளை உருவாக்குவதற்குப் பதிலாக பௌத்த விஹாரைகளைக் கட்டுவதிலேயே அரசின் கவனம் உள்ளது.

யுத்தத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நிலைமாறு கால கட்ட நீதிச் செயற்பாடுகளான பொறுப்புக்கூறல், மீள நிகழாமை, பகை மறப்பு சமாதான முன்னெடுப்பு, அமைதித்தீர்வு எவையும் நடக்கவில்லை. என்பதால் இதுபோன்ற பல பிரச்சினைகளோடு தான் தமிழ் பேசும் மக்கள் வாழ வேண்டியுள்ளது. இதற்குள் நாட்டை உலுக்கும் பாரிய பொருளாதார நெருக்கடி வேறுண்டு. முஸ்லிம் மக்களை ஒடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட 'சகரானின் குண்டுத் தாக்குதல்' இன்னொன்று.

ஆக சிங்கள மக்களை விட இரட்டிப்பு நெருக்கடியோடு தமிழ்பேசும் மக்கள் வாழ வேண்டியிருக்கிறது. இன்னொரு வகையில் சொன்னால், அபாயங்களின் மீதே தமிழ்பேசும் சமூகங்கள் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கின்றன. இலங்கையின் அரசியல் யாப்பு, சட்டம், நீதிபரிபாலனம், ஆட்சிமுறை எல்லாம் இனஒடுக்குமுறையை இனப் பாரபட்சத்தை மிக நுட்பமாக மேற்கொள்வதற்கேற்ற வகையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் யார் அதிகாரத்தில் இருந்தாலும் இந்த அடிப்படையில் மாற்றமில்லை என்பதே சுதந்திர இலங்கையின் வரலாறும் நடைமுறையுமாகும். ஆட்சிக்கு வருவதும் அதிகாரத்தில் இருப்பதும் கூட எப்போதும் சிங்களர்களே. அவர்களே பெரும்பான்மையினர். என்பதால், அவர்களுக்கே அந்த வாய்ப்புகள் உண்டு. அதைக் கடந்து பிற சமூகத்தினர் (தமிழ் பேசும் தரப்பினர்) ஆட்சிக்கு வரவே முடியாது. அதற்கான பெரும்பான்மையும் இல்லை. பிறரை ஏற்றுக் கொள்ளும் உளநிலையும் உருவாகவில்லை. பன்மைத்துவ அரசியற் பண்பாடு, பல்லினத்துக்குரிய அரசியல் நடைமுறை இலங்கையில் வளர்ச்சியடையவில்லை. கட்சிகள் அனைத்தும் இனவாதத்தை மேற்கொள்ளக் கூடியவாறு இன அடிப்படையில், இன அடையாளத்தோடு தான் உள்ளன.



இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணி, தமிழ்தேசியக் கட்சி, தமிழ் மக்கள் முற்போக்குக் கூட்டணி எனத் தமிழ்த்தரப்புக் கட்சிகள்.

இதற்கு நிகராக போட்டியாக ஜாதிக ஹெல உறுமய, சிங்கள மகாசம்மத பூமிபுத்திரக் கட்சி, சிங்கள மகாசபை போன்றவற்றோடு வெளிப்படையாக இன அடையாளத்தைக் காட்டிக் கொள்ளாத பெருங்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி (J.V.P) எனச் சிங்களக் கட்சிகள். அடுத்த பக்கத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எனப் பல முஸ்லிம் கட்சிகள். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி எனப் பல மலையகக் கட்சிகள் (இவை இந்திய வம்சாவழி மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவை). இவை அனைத்தும் அந்தந்த இனங்களையே பிரதிநிதிப்படுத்துகின்றன. ஒன்றை ஒன்று குற்றம் சாட்டிக் கொண்டே தமது இன அடையாள — இனவாத — அரசியலை மேற்கொள்கின்றன. மக்களும் விரும்பியோ விரும்பாமலோ தத்தமது இனக் கட்சிகளுக்கே ஆதரவளிக்கின்றனர். இதைக் கடந்து, பன்மைத்துவமாகச் சிந்திக்கக் கூடிய அளவுக்கு, இந்த நெருக்கடிகளைத் தீர்க்கக் கூடியவாறு இலங்கையில் எந்தத் தரப்பும் இல்லை என்பதே துயரம். மிக நீண்ட யுத்தத்தையும் அதனால் ஏற்பட்ட பேரழிவையும் சந்தித்த பிறகும் எவருக்கும் படிப்பினைகள் ஏற்படவில்லை. இனவாதத்தை முறியடிப்பேன், இலங்கைத் தீவில் சமாதானத்தை நிலைநாட்டுவேன் என்று தன்னுடைய கட்சியை வழிநடத்துவதற்கு எந்தத் தலைவரும் நாட்டில் இல்லை. இதனால் சமாதானத்துக்காக வேலை செய்யக் கூடிய, செயற்படுகின்ற ஒரு பத்துப் பேரைக் கூட இந்த நாட்டில் நம்மால் கண்டு பிடிக்க முடியாலிருக்கிறது.

அண்மையில் மேற்குநாட்டுத் தூதுவர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது அவர் கேட்டார் – போரைச் செய்வதற்காக நீங்கள் நீண்ட காலத்தைச் செலவிட்டீர்கள். பல படையணிகளை உருவாக்கினீர்கள். பல போர்த்தளபதிகளும் உருவாக்கப்பட்டனர். பல உயிர்களைக் கொடுத்தீர்கள். போர் வெற்றிக்காக எவ்வளவோ இழப்புகளின் மத்தியில் நீண்ட காத்திருப்பில் இருந்தீர்கள். அதிலே நீங்கள் எந்த நன்மைகளையும் பெற்றதில்லை. கண்ணீரையும் துயரத்தையும் பகை உணர்வையும் சம்பாதித்தது தான் மிச்சம்.

பதிலாக சமாதானத்துக்காக என்ன விலையைக் கொடுத்தீர்கள்? எத்தனை பேர் சமாதானத்துக்காக உங்கள் நாட்டில் உழைக்கிறீர்கள்? உலகத்தில் அமைதியாக, இணக்கமாக, சமாதானமாக வாழ்வது தானே சிறப்பு? என்று. இதற்கு என்ன பதிலைச் சொல்வது?

எல்லோரும் ஏட்டிக்குப் போட்டியாக இனவாதத்தை வளர்ப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். இனவாதத்திலேயே எல்லோருடைய அரசியலும் நடக்கிறது. அதற்கான நியாயங்களையும் நியாயப்படுத்தல்களையும் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இதில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது.

ஆனால், இதுவோ (Post – War period) போருக்குப் பிந்திய காலமாகும். போருக்குப்பிந்திய காலம் என்பது, போர் உண்டாக்கிய அழிவுகளிலிருந்து படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளும் காலமாகும். அந்தப் படிப்பினைகளின் அடிப்படையில் பகை மறப்பு, மீளிணக்கம், சமாதானம் ஆகியவற்றைக் கட்டியெழுப்ப வேண்டிய காலமாகும்.

உலகமெங்கும் போருக்குப் பிந்திய காலம் என்பது கற்றுக் கொண்ட படிப்பினைகளின் அடிப்படையில் முரண்களைக் களைந்து, புத்தாக்கத்தை உருவாக்கும் காலமாகவே இருக்கிறது. இந்த யதார்த்தத்தின்படி, இந்தக் காலகட்டத்தில் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் அனைத்துத் தரப்பினரும் புதிய அரசியலை — புத்தாக்க அரசியலை — மேற்கொள்ள வேண்டும். அது இன


கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




வாதத்திலிருந்து முற்றிலும் விடுபட வேண்டிய அரசியலாக இருக்க வேண்டும். ஆனால், அதற்கு எவரும் எந்தத் தரப்பும் தயாரில்லை. இதனால்தான் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் தமிழ் மக்களுக்கு தமிழ்த்தலைமைகளாலும் எந்த ஆறுதலையும் கொடுக்க முடியாதிருக்கிறது.

விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்து மாபெரும் தியாகங்களைச் செய்த அந்தப் போரில் பேரிழப்புகளைச் சந்தித்த மக்களுக்கான களப்பணிகளை ஆற்ற வேண்டும் என்று இந்தத் தலைமைகளால் சிந்திக்க முடியாதிருக்கிறது. பிரமுகர் அரசியல் விளையாட்டில் தான் இவை ஈடுபடுகின்றன.

இதில் விடுதலை இயக்கங்களில் இருந்து வந்தவர்களும் (செயற்பாட்டு அரசியலில் உள்ளவர்களும்) பெருந்தவறை இழைக்கின்றனர். பங்கேற்பு அரசியல் (Participation politics) பங்களிப்பு அரசியல் (Contribution politics) அர்ப்பணிப்பு அரசியல் (Commitment politics) என்பதையெல்லாம் கைவிட்டு, பிரகடன அரசியலுக்கு (Declaratory politics)த் தாவிச் சென்று விட்டனர். பிரமுகர் அரசியல் அதாவது பிரகடன அரசியல் (Declaratory politics) தானே வசதி!

இனவாதத்தை அல்லது இன அடையாளத்தை விட்டு விட்டால் தமக்குத் தோல்வி ஏற்பட்டு விடும், மக்கள் தம்மை நிராகரித்து விடுவார்கள் என்ற அச்சம் இந்தக் கட்சிகளுக்கும் அரசியற் தலைவர்களுக்கும் உண்டு. அதை மீறிச் செயற்படுவதற்கும் சவால்களை எதிர்கொள்வதற்கும் இவர்கள் தயாரில்லை. இன எல்லைகளைக் கடந்து அனைத்துச் சமூகங்களிடத்திலும் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்ற எந்தப் பேராளுமையும் இலங்கையில் எழுச்சியடையவில்லை. என்பதால் தொடர்ந்தும் மலிவான முறையில் இன உணர்வைத் தூண்டித் தமது அரசியல் ஆதாயத்தை எட்டி விடுகிறார்கள். இதற்குப் போர்க்காலப் பாதிப்பைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.


இதனால் ஒருவரை ஒருவர் சந்தேகிக்கிறார்கள். நம்பிக்கையீனம் பெரிய தொரு நோய்ப்பாதாளமாக விரிந்து கொண்டே செல்கிறது.

இதே உளநிலையில் தான் இலங்கையின் ஊடகங்களும் உள்ளன. அறிஞர்கள், மதத் தலைவர்கள் எல்லோரும் அந்தந்தச் சமூக — இன — எல்லையைக் கடந்து சிந்திப்பதேயில்லை. எனவே நாடு இனவாதத்திலேயே கட்டுண்டு கிடக்கிறது. இதற்குப் புறம்பாக மாற்றுச் சிந்தனையைக் கொண்ட சமாதானத்தை விரும்புகின்ற தரப்புகளும் உண்டு. அவை சிறியவை. அவற்றுக்கு அதிகாரப் பெறுமானமோ சமூகச் செல்வாக்கோ, ஊடக அங்கீகாரமோ கிடையாது.

ஆகவே, யுத்தம் முடிந்தாலும் நிலைமையில் மாற்றமும் முன்னேற்றமும் உண்டாகவில்லை. யுத்தம் உருவாகுவதற்கு அடிப்படையாக இருந்த காரணங்களும் யுத்த கால நிலவரங்களை ஒத்த போக்கும் நீடிப்பதால் நாட்டை விட்டுப் பலரும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். (அடுத்த வாரமும் தொடரும்)








# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

**Suren Sornalingam BBA**

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

**Over 20 Years Experience in the field of Insolvency**



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# சுயநிர்ணய உரிமையும் ஈழத்தமிழரது அரசியலும்

2024க்கான ஜனாதிபதித் தேர்தல் களம் தென்னிலங்கையை விட தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்திலேயே அதிகம் சூடு பிடித்துள்ளதாகவே தெரிகிறது. கடந்த மே மாதம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜீன் மாதத்தின் 10 - 13 ஆம் திகதிகளில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் மக்கள் சக்தியின் சார்பில் அதன் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவும்



வருகை தந்து பிரசாரங்களையும் உத்தரவாதங்களையும் வழங்கி வருகின்றனர்.

அதேநேரம் வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து தமிழ் மக்கள் பொதுச் சபையாக தம்மை பிரகடனப் படுத்திக் கொண்டு தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதென தீர்மானித்துள்ளன. அதற்கு ஆதரவாக பல தமிழ் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினர் ஆதரவாகவும் இன்னோர் பிரிவினர் எதிராகவும் செயல்பட்டு வருகின்ற தன்மையை அவதானிக்க முடிகிறது. இக்கட்டுரையும் ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை சார்ந்து நோக்கப்படவுள்ளது.

சுயநிர்ணய உரிமை பற்றிய கோட்பாடு சோசலிஸ்டுகளால் அதிகம் முதன்மைப் பட்டது. அதிலும் ரஷ்யப் புரட்சியை வழி நடத்திய வி.ஐ.லெனினே அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார். 1896 இல் சோசலிஸ தொழிலாளர்களும் தொழில் சங்கங்களினதும் கூட்டின் வெளிப்பாடாக லண்டனில் கூடிய சர்வதேச காங்கிரஸ் தீர்மானத்தின்படி உலகிலுள்ள அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணயத்திற்கான முழு உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்தியது.

1960களில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அரசியல் சமூக பொருளாதார பண்பாட்டு உரிமை தொடர்பில் முன் வைக்கப்பட்ட பிரகடனம் தேசியங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தது. தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்றே அதன் அர்த்தப்படுத்தலும் பொருள்மையும் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்தே ஈழத் தமிழரின் சுயநிர்ணயம் என்ற பிரயோகம் செய்யப்படுகிறது. தேசிய இனங்களின் சுயநிர்ணம் என்பதை வரலாற்று பொருளாதார கருத்து நிலையிலிருந்து நோக்கினால் அது அரசியல் சுயநிர்ணயம், அரசு சுயாதீனம், தேசிய இன அரசின் உருவாக்கம் என்றே பொருள்படும்.

தேசியங்களின் சுயநிர்ணயம் என்பதன் அர்த்தத்தை லெனினிடமிருந்தே புரிந்து கொள்வது பொருத்தமானது. அவரது வார்த்தையின்படி, தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை என்பது பிரத்தியேகமாக அரசியல் ரீதியில் சுயேச்சை பெறும் உரிமையை, ஒடுக்கும் தேசிய இனங்களிலிருந்து அரசியல் ரீதியில் சுதந்திரமாகப் பிரிந்து செல்லும் உரிமையை குறிக்கிறது.

ஸ்தூலமாக அரசியல் ஜனநாயகத்தின் சுயநிர்ணய கோரிக்கையின் உட்பொருள் பிரிந்து செல்வதற்காக கிளர்ச்சி செய்ய முழுச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்பதும் பிரிந்து செல்லும் தேசிய இனத்தின் பொது வாக்கெடுப்பு மூலமாக பிரிந்து செல்வது பற்றிய முடிவை மேற்கொள்ள வேண்டும் என்பதுமாகும். இதுபற்றி லெனின் மேலும் குறிப்பிடும் போது, ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தேசியவாதத்திற்கும் இடையே ஒரு பெரிய இனத்தின் தேசியவாதத்திற்கும் ஒரு சிறிய இனத்தின் தேசியவாதத்திற்கும் இடையே வேறுபாடு காண வேண்டும் என்பது அவசியமானது. பிரிந்து செல்லும் உரிமை எல்லாத் தேசியங்களிலும் அங்கீகரிப்பது. பிரிந்து செல்வது ஒவ்வொரு ஸ்தூலமான பிரச்சினையையும் எல்லா சமத்துவங்களையும் எல்லா தனியுரிமைகளையும் எல்லா தனித்தன்மைகளையும் அகற்றுவது என்ற கருத்துக் கோணத்திலிருந்து மதிப்பிடுதல் வேண்டும் என்றார்.

சோசலிஸ மரபிலிருந்து கொண்டு தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தை அமுலாக்க மறுப்பது சோசலிஸத்திற்கு துரோகம் செய்வதாகும் என்றார் லெனின். லெனின் மிகத் தெளிவாக சுயநிர்ணயம் என்பது பிரிந்து செல்வதுடன் கூடியது என்று குறிப்பிட்டார்.

பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக் கோட்பாடானது, எவ்வாறு பிரிந்து செல்வதென்ற கேள்விக்கு ஜனநாயகபூர்வமாக பதிலையும் தந்துள்ளது. வரலாற்றின் போக்கு அத்தகைய வளர்ச்சியை ஜனநாயத்தின் வெற்றியாக கொள்கிறது. பிரச்சினைக்குள்ளாகும் தேசிய இனம் பிரிய விரும்புகின்ற தேசிய இனத்தின் மத்தியில் எடுக்கப்படும் பொதுசன வாக்கெடுப்பின் (Plebiscite). அதனைத் தீர்மானிப்பதாகும்.

பொதுசன வாக்கெடுப்பு என்பது நவீன வரலாற்றில் பிரஞ்சுப் புரட்சியின் விளைவாய் தோன்றியதாகும். Plebiscite என்பது ஒரு பிரஞ்சுப் பதமாகும். இது Itum என்ற இலத்தீன் மூலச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். Plebis என்றால் பொது மக்கள் என்றும் ளுஉவைரஅ என்றால் ஆணை அல்லது தீர்ப்பு என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. இதன் நீட்சியே பொதுவாக்கெடுப்பு என்றும்பொது மக்கள் தீர்ப்பு என்றும் வரலாற்று வளர்ச்சி அடைந்தது.

பொதுசன வாக்கெடுப்புக்கு இரு பரிமாணங்கள் உண்டு. ஒன்று, தேரியக் கொள்கை சார்ந்து நாடு தழுவிய விதத்தில் ஆம் அல்லது இல்லை வாக்களிப்பு மேற்கொள்ளப்படுவது. எடுத்துக் காட்டாக மூன்று தடவை கனடாவிலிருந்து கியூபெக் மாநிலம் பிரிந்து தனியரசாவதற்காக மேற்கொண்டு தோல்வியடைந்த முயற்சியை குறிப்பிடலாம்.

இரண்டு, ஒரு மக்கள் பிரிவினர் ஓர் அரசிடமிருந்து பிரிந்து செல்வதா அல்லது இல்லையா என்ற விதத்தில் வாக்களிப்பது அல்லது ஒரு மக்கள் பிரிவினர் அல்லது ஓர் அரசோ இன்னோர் அரசுடன் சேர்வதா இல்லையா என்பதன் பொருட்டு வாக்களிப்பது. ஒரு தேசிய இனத்தின் பிரிந்து செல்வது பற்றிய விகாரத்தில் குறித்த தேசிய இனத்தை முழுமையாக ஓர் அலகாகக் கொண்டு அத்தேசிய இனத்திற்குள் மட்டும்தான் வாக்கெடுப்பை மேற்கொள்ளலாம். 1905இல் சுவீடனிலிருந்து நோர்வே பிரிந்து செல்வதற்கான பொது மக்கள் வாக்கெடுப்பை மேற்கொண்டு வெற்றி கண்டது.

அமெரிக்க ஜனாதிபதி வுட்றோ வில்சன் 1918 ஆம் ஆண்டு 14 அம்ச பெப்ரவரி பிரகடனத்தில் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு அங்கீகரிப்பதாக குறிப்பிட்டுள்ளது. அதன்படி சுயநிர்ணய உரிமையானது, அமெரிக்காவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்க விடயமாகும்.

இந்தகைய தளத்தில் ஈழத்தமிழர் வட்டுக் கோட்டைத் தீர்மானத்திலும் திம்புக் கோட்பாட்டிலும் அத்தகைய சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை வெளிப்படுத்தியிருந்தனர். அதுவே தமிழ் மக்களின் ஆணையாக கருதப்பட்டு நீண்ட ஆயுதப் போராட்டமும் நிகழ்ந்து முடிந்தது. ஆனால் அத்தகைய ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயுத அமைப்புகள் பிரிந்து செல்லும் உரிமையை முன்மொழிந்தாலும் அகச் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வு காணவும் முயன்றதாக கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. குறிப்பாக நோர்வேயின் தலைநகரில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற மூன்றாம் கட்ட சமாதானப் பேச்சுகளில் இருதரப்புடன் சேர்ந்து நோர்வே வெளியிட்ட நிலைப்பாட்டு ஆவணத்தில் அகச் சுயநிர்ணயம் அல்லது உள்ளக சுயநிர்ணயம் பற்றிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் அதன் பிரகாரம் கண்டறியப்பட்ட தீர்வினை ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் உள்ளக சுயநிர்ணயத்தினை பின்பற்றி ஆராய்வதற்கு இருதரப்பும் உடன்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. இத்தீர்மானமானது, இலங்கைத் தீவிலுள்ள அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும் என்பதையும் இரு தரப்பும் ஏற்றுக் கொண்டதாக நோர்வே அறிக்கையிட்டுள்ளது.

2009களுக்குப் பின்னர் சுயநிர்ணய உரிமைக் கோட்டின் அடிப்படையிலான அணுகு முறைகளைக் காட்டிலும் இலங்கைத்தீவுக்குள் தீர்வினை எட்டும் முயற்சிகள் தமிழ் அரசியல் கட்சிகளால் அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 1987 ஆம் ஆண்டில் இலங்கை-இந்திய அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை மையப்படுத்தியே

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



அதிகம் பேச்சுவார்த்தைகளும் வரைபுகளும் முன் வைக்கப்பட்டன. ஆனால் சிவில் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் இணைந்து தீர்வுக்கான வற்புறுத்தல்களை அதிகமாக முன் வைத்ததோடு சமஷ்டி மற்றும் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளன.

இரண்டு, எழுக தமிழ் போராட்டத்தையும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையுமான போராட்டத்தையும் வடக்கு, கிழக்கு போராட்டத்தையும் அத்தகைய தரப்புதன் முன்னெடுத்திருந்தன. அதன் விளைவாகவே தமிழ் மக்கள் பேரவை வடக்கு மாகாண சபை மற்றும் கட்சிகள் அடிப்படையில் பல தீர்வுத் திட்டங்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. அதேநேரம் தமிழ் அரசியல் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளும் இந்தக் காலப் பகுதியிலேயே இரண்டாவது வட்டுக்கோட்டைத்




தீர்மானத்தையும் 13.ஆவது திருத்தத்தையும் இமாலயப் பிரகடனத்தையும் முன் வைத்திருந்தன.


எனவே தேசிய இனங்களின் சுயநிர்ணயக் கோட்பாட்டின அடிப்படையிலான போராட்டத்தை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா தொடக்கி வைந்தபோதும் அதன் நீட்சியை ஆயுதப் போராட்ட அமைப்புகளே அதிகம் முன்னெடுத்தன. அதன் முழுமையை விடுதலைப்புலிகள் அமைப்பு அதீதமாக. தனியரசுக்கான செயல்பாடுகளை கொண்டியங்கியது. அது 2009களுக்குப் பின்னர் முடிவுக்கு வந்த பின்னர் சயநிர்ணயத்திற்கான பேச்சுகளும் அறைகூவல்களும் நிகழ்கிறதே அன்றி முழுமையான போராட்டம் எதனையும் முழு அளவில் கண்டு கொள்ள முடியவில்லை.

உள்ளக சுயநிர்ணயத்தையும் கைவிட்டு 13க்குள் தீர்வை எட்டும் தரப்புகளும் அதற்கான உழைக்கும் தமிழ் தரப்புகளையுமே காணக் கூடியதாக உள்ளது. ஆனாலும் தமிழ் மக்களின் அத்தகைய சுயநிர்ணயத்திற்கான எண்ணம் வலுவானதாக உள்ளதென்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதில் அதிக தமிழ் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் பற்றுதியோடு செயல்படுவதை கண்டு கொள்ள முடிகிறது.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! ஒவ்வொரு முடிவு எடுக்கும் போதும் பல முறை சிந்தித்து செயல்படுங்கள். பூர்வீக சொத்துகளால் பிரச்சனைகள் வந்து போகும். சுபச் செலவு எதிர்பாராமல் வந்து கொண்டே இருக்கும். கார்களில் செல்லும் போது சீட் பெல்ட் அவசியம் அணிந்து கொள்ளவும். உங்கள் குடும்பத்திற்கு ஆன்மீக அன்பர்களின் வழிகாட்டுதலும், ஒத்துழைப்பும் கிடைக்கும். பொதுவாக இவ்வாரம் இறைவழிபாடு செய்வது நன்மை தரும்.





ரிஷபராசி அன்பர்களே! நிதானமாகவும், பொறுமையாகவும் இருக்க வேண்டிய காலமிது. மறைமுக எதிரிகளால் ஏற்படும் ஒவ்வொரு பிரச்னையும் உங்களுக்கே நன்மையை கொடுக்கும். குடும்பத்தில் யாருக்கும் வாக்கு கொடுக்காமல் தவிர்க்கவும். அரசாங்க வழிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும். உஷ்ண சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், கண் பிரசச்னைகள் வந்து போகும். புத்திரர்கள் இடத்தில் கவனத்தை செலுத்த வேண்டிய காலகட்டமிது.





மிதுனராசி அன்பர்களே! எண்ணத்தில் தெளிவும், உள்ளத்தில் உற்சாகமும் இருக்கும். சுப காரியங்களை முன்னின்று செய்வீர்கள். விடுபட்டு போன பழைய சொந்தம் மீண்டும் மலரும். புத்திர வழியில் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். முகத்தில் பொலிவும், புத்துணர்ச்சியும் இருக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பூர்வீக சொத்துக்களின் பிரச்சனைகள் நீங்கும். புத்திர வழிகளில் புகழும் செல்வாக்கும் கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! சிந்தனையும், செயலும் மேம்படும். ஒவ்வொரு காரியமும் உங்களுக்கு வெற்றியை கொடுக்கும். புது வாகனங்கள் அமையும். சாதாரண விஷயங்களுக்கு கூட தந்தையுடன் கருத்து வேறுபாடு வரலாம். குடும்பத்தில் மனைவி வழியில் உள்ள உறவினரின் திருமண காரியங்களுக்கு உதவி செய்யும் சூழ்நிலை ஏற்படும். சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். அந்நிய தேசத்தில் இருந்து வரும் நல்ல செய்தி மனமகிழ்வைத் தரும்.





சிம்மராசி அன்பர்களே! எதிர் பார்த்த இடங்களிலிருந்து நல்ல செய்தி வரும். உங்கள் பணம் உங்களிடம் வந்து சேரும். எந்த சந்தர்ப்பத்திலும் கோபமாகாமல் தேவையற்ற பேச்சுகளை குறைப்பது நன்மையை தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். குல தெய்வ வழிபாட்டால் நற்பலன்கள் ஏற்படும். மன தைரியம் உண்டாகும். வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும்.




கன்னிராசி அன்பர்களே! தடுமாற வைக்கும் சோதனைகள் கூட உங்களின் தெய்வ பக்தியால் பகலவனை கண்ட பனி போல் விலகி விடும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். வாழ்க்கைத் துணையால் லாபங்கள் ஏற்படும். தந்தையின் உடன் பிறந்தோரால் நல்ல செய்தி கிடைக்கும். புத்திரர்களால் சில சங்கடங்களை சந்திக்க நேரிடும். எதிர்பாராத தன லாபம் கிடைக்கும். அரசு வேலை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும்..





துலாம்ராசி அன்பர்களே! உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருப்பார். தந்தையின் உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிய நேரமிது. குடும்ப ஒற்றுமையில் சிறு சலனங்கள் ஏற்படலாம். அதனால் கவனமுடன் நடக்கவும். குடும்ப உறுப்பினர்களை கண்டிக்கும் போது தேவையில்லாத வார்த்தைகளை பயன்படுத்தாமல் நிதானமாக பேசவும். அடிக்கடி மனக் குழப்பங்கள் வந்து மறையும். உங்களின் அன்பான அணுகுமுறையால் எல்லாரையும் திருத்தி விடுவீர்கள்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த சூழ்நிலையிலும் மன உறுதியுடன் செயல்படுவீர்கள். நீண்ட நாட்களாக வராமல் இருந்த நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடுகள் வந்தாலும் பின்பு உங்கள் மனதை புரிந்து கொண்டு சமாதானம் ஆகி விடுவார். உத்யோகஸ்தர்கள் சவால் மிகுந்த வேலைகளை முடித்து மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவர். தொழில் துறையினருக்கு மந்தமான காலம்








தனுசுராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். மங்கல காரியங்கள் நடக்கும். நீங்கள் நேர்மையாக பேசும் பேச்சு சிலருக்கு பிடிக்காமல் போகலாம். இடம், பொருள் பார்த்து பேசுவது நல்லது. தாயாரின் உடல் நிலையில் கவனமாக இருக்கவும். புத்திர வழியில் மதிப்பும், செல்வாக்கும் உண்டாகும். சில நேரங்களில் தாயாரின் சொல் புண்படுத்தக் கூடும். கவலை கொள்ள வேண்டாம்.




மகரராசி அன்பர்களே! மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். வழக்குகள் சார்ந்த எதிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் சில சங்கடங்கள் வந்தாலும் உங்கள் சாமர்த்தியத்தால் எதையும் சமாளித்து விடுவீர்கள். கடன் பிரச்னை படிப்படியாக குறையும். புத்திரர்களின் செயல்பாடுகளை கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டிய நேரம். அவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு சங்கடத்தை தரலாம்.




கும்பராசி அன்பர்களே! தடைப்பட்டுப் போயிருந்த காரியங்கள் எல்லாவற்றையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உங்கள் இல்லங்களில் சுபமான நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறும். சில சமயங்களில் அசாத்திய தைரியத்தால் சில முடிவுகளை எடுப்பீர்கள். அது உங்களுக்கே பாதகமாகி விடும். அதனால் நிதானமாக இருப்பது நன்மையாகும். குடும்பத்தில் திருமணமாகாதவர்களுக்கு நல்ல வரன் அமையும்.




மீனராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் அவசரமும் படபடப்பும் இல்லாமல் செயல்படவும். எதிர்பாராத செலவுகளுக்கு வாங்கிய கடன்களால் மனச்சங்கடங்களுக்கு ஆளானாலும் உங்களின் நாணயமான குணத்தினால் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணையிடம் கருத்து வேறுபாடு வரும் சூழ்நிலை உருவாகும். கவனமுடன் இருக்கவும்.தந்தை வழி உறவினர்கள் மறைமுகத் தொல்லைகள் கொடுப்பார்கள்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# வள்ளல்களும் தமிழரசியலும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் வள்ளல்கள் தங்களை புதிய எம்ஜிஆர்களாகக் கற்பனை செய்து கொண்டு, தான நிகழ்வை நாடகத்தனமாக ஒழுங்குபடுத்தி பாட்டுக்கு எம்ஜிஆர் போல ஆடி, யுடியுப்பர்களுக்குச் செய்தியாக மாறும் போது தான், அது விவகாரமாகிறது. தொண்டு நல்லது. தானம் நல்லது. ஆனால் தொண்டர்களும் வள்ளல்களும் அரசியல்வாதிகளாக வர விரும்பினால் அதற்குரிய ஒழுக்கமும் தரிசனமும் அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும். தானம் ஒரு அர்ப்பணிப்புத் தான். ஆனால் அது மட்டும் போதாது. பொருத்தமான அரசியல் தரிசனம் இருக்க வேண்டும். அது தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். அதை ஒரு தேசியக் கடமையாக செய்ய வேண்டும். அற்புதமான ஒரு தமிழ்ப் பழமொழி உண்டு. ஒரு கை கொடுப்பது மறு கைக்குத் தெரியக் கூடாது என்று. தானம் செய்வதால் தனக்குக் கிடைக்கும் புகழையும் பிரபல்யத்தையுங் கூடத் தானம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். மகாபாரதத்தில் கர்ணன் இறக்கும் தறுவாயில் அவனுடைய தர்மமே அவனுக்குப் பாரமாக இருந்தது. அதனால் கர்ணன் தானம் செய்து தான் சம்பாதித்த புண்ணியத்தையும் தானம் செய்தான். அது புராண கால கர்ணன். அவனுக்குத் தலை காத்த தர்மம் ஒரு பாரம். நவீன அரசியலில் தர்மம் ஒரு முதலீடா?

# எது பேரழிவு? யாருக்குப் பேரழிவு?

(9ம் பக்கத் தொடர்ச்சி) சம்பந்தர் அனுபவிக்கும் அந்த ஆசனம் கிடைக்காமல் போகக்கூடும். கிழக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கட்சிகள் கைப்பற்றுவது சவால்களுக்கு உள்ளாகும். வடக்கு மாகாண சபையிலும் முன்னம் கிடைத்த பெரும்பான்மை கிடைப்பது கடினம்.தவிர மூன்றாவது புலப்பெயர்ச்சி அலை காரணமாக வெளியேறும் வாக்காளர்களின் தொகை அதிகரித்தால்,அதுவும் தமிழ் பிரதிநிதித்துவத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தலாம். எனவே ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தத் தவறினால் தேர்தல் அரசியலிலும் தோல்விகரமான ஒரு சூழல் ஏற்படும் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியலிலும் வீழ்ச்சிகரமான ஒரு சூழல் ஏற்படும். அதுதான் உண்மையான பொருளில் பேரழிவாக அமையும்.

# காலிஸ்தான் தீவிரவாதி மறைவுக்கு நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்திய கனடா



கனடாவில் கொல்லப்பட்ட காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் நினைவாக அந்நாட்டு நாடாளுமன்றத்தில்மௌன மவுன அஞ்சலிசெலுத்தப்பட்டது. இதனை கண்டித்து இந்தியா பதிலடி கொடுத்தது.

கடந்த ஆண்டு கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள குருத்வாரா அருகே மர்ம நபர் களால் காலிஸ்தான் தீவிரவாத அமைப்பை சேர்ந்த ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவம் தொடர்பாக இந்தியா மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். ஆனால் இந்த குற்றச்சாட்டு உள்நோக்கம் கொண்டது என்றும் அபத்தம் என்றும் இந்தியா மறுத்துவிட்டது. இதனால் இந்தியா-கனடா நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது.

இந்நிலையில் கனடா நாடாளுமன்றத்தில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் நினைவாக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதற்கு பதிலடியாக 1985-ம் ஆண்டில் ஏர் இந்தியா கனிஷ்கா விமானத்தில் காலிஸ்தான் தீவிரவாதிகள் வைத்த வெடிகுண்டு வெடித்ததில் உயிரிழந்த 329 அப்பாவிகள் நினைவாக மௌன அஞ்சலி கூட்டம் நடத்தப் போவதாக கனடா நாட்டின் இந்திய தூதரகம் அறிவித்து உள்ளது.

இது குறித்து வான்கூவரில் உள்ள இந்திய தூதரகம் 'எக்ஸ்' பக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தீவிரவாதத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. உலகளாவிய அச்சுறுத்தலை எதிர்கொள்ள அனைத்து நாடுகளுடன் நெருக்கமாக இந்தியா பணியாற்றி வருகிறது.

கடந்த 1985-ம் ஆண்டில் ஏர் இந்தியா கனிஷ்கா விமானத்தில் தீவிரவாதிகள் வைத்த குண்டு வெடித்ததன் 39-வது ஆண்டு நினைவு நாள் ஜீன் 23-ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் 86 குழந்தைகள் உட்பட 329 அப்பாவி பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். சிவில் விமான வரலாற்றில் கொடூரமான தீவிரவாத தாக்குதலாக இது கருதப்படுகிறது.

# பௌர்ணமி தினத்தில் நடைபெறும் தையிட்டி திஸ்ஸ விகாரைப் போராட்டம்

தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் கடந்த ஒரு வருடமாக பௌர்ணமி தினத்தன்று மட்டும் இடம்பெற்று வருகிறது.

பொது மக்களது காணிகள் அபகரிக்கப்பட்டு, உரிய அனுமதி பெறப்படாமலேயே இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இவ் விகாரையை அகற்றுமாறு கோரி ஒரு வருட காலமாக தொடர் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு இந்த விகாரையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் விதமாக இந்த போராட்டம் இடம்பெறுகிறது. இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HomeLife Higher Standards
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com

# தமிழர் தரப்பின் பலவீனம் இலங்கை இந்திய அரசுகளுக்கு சாதகம்

தமிழர் தரப்பின் பலவீனம் இலங்கை இந்திய அரசுகளுக்கு சாதகமாக மாறியுள்ளதாக முன்னாள் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.மூன்றாவது முறை பதவி ஏற்ற பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் உத்தியோகபூர்வ முதற் பயணமாக இலங்கை வந்து அனைத்து தரப்புக்களையும் சந்தித்துள்ளார்.

தமிழர் தரப்புடனான சந்திப்பு தமிழ் மக்கள் எதிர் பார்த்தது போன்று ஆரோக்கியமாக அமையவில்லை. மாறாக ஜெயசங்கருடனான சந்திப்பில் ஒற்றுமையான நிலைப்பாட்டை கூட்டாக ஒரு தீர்மானமாக தெரிவிக்காக தவறியதுடன் ஜெயசங்கர் முன்னிலையில் ஒரே கட்சிக்காரர் முரண்பட்ட கருத்து விவாதத்தில் ஈடுபட்டதுடன் பிறிதொரு கட்சி 13 வது திருத்தம் மற்றும் மாகாணசபைத் தேர்தல் தேவையில்லை என்ற கருத்தையும் தெரிவித்தனர்.

இலங்கையின் சிங்கள ஆட்சியாளரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பல்வேறு வியுகங்களை வகுக்கும் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தமிழர் தரப்பின் பலவீனம் வாய்ப்பாகவும் இரண்டாம் தரப்பின் நெருக்கடிகள் இன்றி இலங்கை அரசை நேரடியாக கையாள வழி சமைத்துள்ளது.



சம நேரத்தில் இந்திய அரசின் ஆதரவுடன் அழுத்தங்களை எதிர்பார்க்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பின் நெருக்கடிகள் இல்லை என்ற நிலையும் உறுதியாகியுள்ளது.

கடந்த கால தமிழர் தரப்பின் இராஜதந்திர பலவீனத்தை கற்றுக் கொண்ட பாடமாக விளங்கி இலங்கை இந்திய தரப்புக்களை தந்திரோபாய ரீதியில் கையாள தமிழர் பிரதிநிதிகள் ஒற்றுமையின்மையால் பலவீனப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலை எதிர் காலத்தில் எஞ்சியுள்ள தமிழர் இருப்புக்களை யுத்தம் மற்றும் சத்தமற்ற நிலையில் அழித்து விடும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# MRI - CT ஸ்கேன்களுக்கு காத்திருப்பு நேரத்தைக் குறைக்கிறது ஒன்ராறியோ அரசாங்கம்!

மாநிலமெங்கும் MRI மற்றும் CT ஸ்கேன் மருத்துவ சேவைகளுக்கு மக்கள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையை தவிர்த்து அதனை 28 நாட்களாக குறைக்க ஒன்ராறியோ அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கென ஆண்டுதோறும் 100,000 ஆசுஐ மற்றும் ஊவு ஸ்கேன்களை ஒன்ராறியோ அரசு சமுக நிலையங்களில் நிறுவவுள்ளது. அமைச்சர் விஜய் தணிகாசலம், 'ஸ்கேன் வசதிகள் குறுகிய காலத்துக்குள் கிடைக்கச் செய்வதன் மூலம் ஒன்ராறியோ சுகாதாரத்தினை மேம்படுத்துகிறோம்' எனக் குறிப்பிட்டுள்ளதுடன், சரியான நேரத்தில் மதுத்துவ சேவைகள் கிடைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார்.



இம்முன்முயற்சியானது அனைத்து மக்களுக்கும் சரியான நேரத்தில் உயர்தர மருத்துவ பராமரிப்பு கிடைக்கப் பெறுவதற்கான ஒன்ராறியோ அரசின் உறுதிப்பாட்டைக் காண்பிக்கிறது.

வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE | CRITICAL ILLNESS | DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE | SUPER VISAS | RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800 ajithinsurance.ca ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4